REGD NO: M 1530.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்

வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI | JAN. 1929 | № 1

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

			பக்கம்.
தெய்வ வணக்கம்	...	...	1
ஹிதோபதேசம்	...	...	2—4
பாலவிநோதினியின் பதினோராவதாண்டு விஷயம்	...	...	5—7
இன்சொல் இடர்ப்படும் பதில் இனிய நல்மொழிசொல்	...	...	8—13
வருஷப் பிறப்பு	...	...	14—15
தெய்வ பக்தி	...	...	16—18
செவிட்டுப் பிறவிகள்	...	...	19—21
காலப்ரயாணம்	...	...	22
ஆர்கால்தேசத்து இராணி		...	23—27
ஆயுதைசகர்கள்	...	...	28—35
பெண்களின் சம்பாஷணை		...	36—39
கோதாட்டொழி	...	...	40—43
அரசன் அரவியானது	...	...	44—48
பிள்ளை விளையாட்டு	...	...	49—56

குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

BEAUTY AND UTILITY

Making beauty useful by making utility beautiful is one of the true offices for craftsmanship. Here, useful things, necessities of every day, gold and silverware, jewellery, are wrought in form and fashion and detail of charm and beauty which interest them with their double value.

From these, thoughtful friends, may in making their wedding Gifts, surround the bride with a beauty that is useful and a utility that is beautiful.

SURAJMAL LALLUBHAI & CO.

Diamond Merchants, Jewellers, Gold and Silversmiths,

313, Esplanade, Madras. 135, Big Bazaar, Trichinopoly. 12, Lal Bazaar St., Calcutta. 134, Mogul St., Rangoon.

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக் கூடியதுமான இப்புத்தகம். தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94. சைனா பஜார் ரோட். சௌகார்பேட். மதராஸ்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம் மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி, நபும்சகத்துவம் இவை போன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0

மதன மஞ்சரி அபீஸ், 1/94, சைனா பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி



காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது, நெ. 1 ஸ்பெஷல் பட்டணம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. டை சாதா பட்டணம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M B., & C.M., & M.L C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாட்டல் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 டை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0 விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகையறா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

பேடன்ட் மருந்துகளுக்கு சகாயமான இடம்

HILTON & CO.,

No. 32, Broadway, Madras.

A RENOWNED CURE FOR ALL FEVERS.

வெள்ளி மாத்திரைகள்

மலேரியா, இன்புளுயென்சா, முதலான ஜுரங்களுக்கும், வெகுகாலமாயிருக்கும் ஜுரக்கட்டிகளுக்கும் உபயோகம்.

இதை சாப்பிட்ட பிற்பாடு தங்களுக்கே இதன் குணம் தெரியும்.

12 மாத்திரையுள்ள ஒரு புட்டி விலை அணா 8.

ஒரு நாளைக்கு 3வேளை 1 மாத்திரை வாயில் போட்டுக் கொண்டு வெந்நீர் சாப்பிடவேண்டியது.

உயிருள்ளது போன்ற

பேசும் படங்கள்.

இது ஜர்மன் தேசத்திய படம் தான் ஆனால் இந்தப் படங்கள் உயிருள்ளது போலவே தோன்றும். இந்த படத்தை ஒரிடத்தில் அமுத்தினால் பலவிதமான மிருகபாஷைகள் பேசும். அதாவது. பூனையைப்போல் கத்தும், நாயைப்போல் குலைக்கும், புலியைப்போல் சீறும். கரடியைப்போல் கர்ஜிக்கும், குழந்தையைப்போல் அழும் இன்னும் அநேகவிதமான காட்டு மிருக படங்கள் தன் தன் சுயபாஷையைப்போல் கத்தும். மனிதன் படம் மனிதனைப்போலவே பேசும். இது ஓர் ஆச்சரியம். உங்கள் சட்டை ஜேபியில் வைத்துக்கொண்டு பிறர் அறியாமலேயே பேசச் செய்யலாம் பார்ப்பவர்கள் இது ஒரு ஜாலவேடிக்கை என்று எண்ணுவார்கள். இந்தமாதிரி உயிருள்ள படக்காட்சி படங்கள் இதுவரையில் இந்தியாவிற்கு வந்திராத காட்சி. நிரம்பவும் ஆச்சரியம். இதை ஒவ்வொருவரும் அவசியம் ஒரு செட் வரவழைத்து வைத்துக்கொள்ளவேண்டியது. கைவசம் கொஞ்சம் தான் இருக்கிறது. உடனே எழுதுங்கள்.

அழகிய பேசும் 6-படங்கள்கொண்ட செட் 1-க்கு	ரூ.	1	8	0
,, 12 ,, ,, 1-க்கு	,,	2	8	0

வி. பி. எஸ் அண்டு கம்பெனி, பார்க் டவுன் போஸ்டு, மதராஸ்.

பாரதம்—ஆதிபர்வம்

தமிழ் வசனம்

நல்ல உயர்ந்த கிளேஸ் பேப்பரில் ஆப்டோன் படங்களுடன் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டுள்ளது. பாரதம் படிப்பவர்களுடைய பாபத்தைப் போக்கவல்லது; காரியசித்தியை அளிக்கத்தக்க மகிமையை உடையது. சகல ஞானத்தையும் போதிக்கத் தக்கது. ஆதலால் பெரியோர் இதனை ஐந்தாம் வேதமென்றும் கூறுகின்றனர். இந்த வசனம் பிரசங்க ரத்னாகரம் வித்வான் த. சண்முகக் கவிராயர் என்பவர் எழுதியது, இந்நூலை வாசிப்பவர் பிரசங்கவன்மையை அடைவதுடன் இனிய வசனம் எழுதும் பாஷாஞானத்தையும் பெறுவார். ஆதலால் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டியது நம் தமிழ் நாட்டு ஸ்திரி புருஷர்களுடைய கடமைகளிலொன்றாகும். மற்றைய பருவங்களும் விரைவில் அச்சாகிவருகிறது.

ஆதிபர்வம் காலிகோ பயிண்டு விலை ரூபா **3-8-0.**

V. RAMASWAMY SASTRULU & SONS,
293, Esplanade, Madras.

ராமுலு புதிய ஸங்கீதம்

வித்வான் கெ. வி. ஸ்ரீநிவாச அய்யங்கார்
இயற்றியது.

1. ஸங்கீத சிந்தாமணி	...	ரூபா	3	0	0
2 திராவிட கானம்	...	,,	3	0	0
3. ஸங்கீத சில்லரைக்கோர்வை		,,	3	0	0
4. ராமுலு கீர்த்தன ரத்னங்கள்		,,	1	4	0

குறிப்பு:—மேற்குறித்த நான்கு ஸங்கீதபுஸ்தகங்களின், முழு விபரமான கீர்த்தனை அட்டவணையுடன் கூடிய கேட்லாக்கு, விலாசம் தெரிவித்தால் இனமாய் அனுப்பப்படும்.

திகம்பரசாமியார் பால்யலீலை

இரண்டு பாகம் விலை ரூபா **5**.

இது எத்தனையோ அற்புதமான நாவல்களை எழுதித் தங்க மெடல்களும் நற்புகழும் பெற்றுள்ள நூலாசிரியரான நமது வடுவூர் கே துரைசாமி அய்யங்கார் அவர்கள், B.A. யால் எழுதப்பட்டது. மேற்படி நூலாசிரியர் எழுதி, எழுதி அநுபவ முதிர்ச்சியும் கைதேர்ச்சியும் பூரணமாக பெற்றிருக்கும் பரிபக்குவநிலைமையில் சமீபகாலத்தில் இந்த நாவல் சுயமாக எழுதப்பெற்றதாகையால் புஸ்தகத்தில் இரண்டொரு வரிகளைப் படிக்கத்தொடங்கும் பொழுதே தேனும் அமிர்தமும் ஊறுமென்பதில் ஐயமே இல்லை. ஆகையால் இதுவரையில் எழுதப்பட்டுள்ள அருமையான நாவல்கள் யாவற்றிற்கும் இது சிரோரத்னம்போல விளங்கும் மாண்புடையது.

சரோஜனி	....	ரூபா	2	0	0
குடும்ப விநோதக்கதைகள்.		,,	2	0	0
பச்சை மோதிரமர்மம்	....	,,	1	0	0

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், இராயபுரம், மதராஸ்.

உங்கள் காதலிமார்களை வேதசுலபமாய் வசியப்படுத்த வேண்டாமா?

அவர்களிடம் நீங்கள் நித்யானந்த சுகம் அனுபவிக்க வேண்டாமா??

அவர்கள் உம்மிடம் என்றும் அன்புடன் இருக்கும்படி செய்ய வேண்டாமா???

இவை எப்படி? கீழே வாசியுங்கள்!

பாரிஸ் நகரத்து வனப்பு மிகுந்த பெண்களின் படுக்கையறைப் போட்டோ படங்களை நாங்கள் ஸ்பெஷலாக தருவித்திருக்கின்றோம். பாரிஸ் மாதரின் லீலாவிநோதங்களையும் அவர்களின் ஒப்புயர்வற்ற ரூபலாவண்யங்களையும் அவர்கள் தங்கள் காதலர்களுடன் பலமாதிரியாய் சேர்த்தணைத்தும், பலதினுசுகளில் முத்தமிடும் வகையையும் உள்ளவாறு எடுத்துரைக்க எம்மால் இயலாத காரியமாகையால் இங்கு விவரிக்க விடுத்தனம். இப்படங்களை கண்களால் பார்த்தே ஆனந்தம் கொள்ளவேண்டும், எத்தனை நாட்கள் ஆனாலும் சலிப்பென்பதே யில்லாமற் பார்த்துக்கொண்டிருக்கலாம். இதுவரையிற் இவ்வளவு அழகிய படங்களை, அதிக செலவழித்து பாரிஸ் நகரத்திலிருந்து யாரும் வரவழைத்ததில்லை.

உங்கள் படுக்கையறையை சிங்காரிப்பதற்கு இப்படங்களை வாங்கி அலங்கரிப்பதைவிட வேறுவழி அவ்வளவு அழகை கொடாது என்பதை உறுதியாய்ச் சொல்லவல்லோம். அப்படங்களை உமது காதலிமார்கள் பார்க்கும்பொழுதெல்லாம் உம்மீது அளவில்லாத அன்பு கொண்டாடி அவர்களின் முழுப்பிரியத்தையும் உம்மீது செலுத்தி உம்மை எப்பொழுதும் ஆனந்த சாகரத்தில் ஈடுபடும்படி செய்வார்களென்பதை நிச்சயமாய் நம்பலாம்.

தாமதமின்றி இன்றைக்கே ஒரு செட் "சுகிர்த லீலாவிநோத படங்கள்" ஆர்டர் செய்யுங்கள்.

25 படங்களடங்கிய 1 செட் ரூபா 3-8

(தபாற் கூலி பிரத்யேகம்)

குறிப்பு:—இப்படங்கள் இருபதுவயது மேற்பட்டவர்கட்கும் விவாகமானவர்கட்கும் மாத்திரம் அனுப்பப்படும்.

வில்மா பாங்கி அண்டு கம்பெனி,

இராயபுரம், மதறாஸ்.

THE LAW OF ELECTION

BY

K. L. NARASIMHA RAO,

Advocate, High Court, Madras.

Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public-worker and practitioner.

Price Rs. 3-8-0. *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *15, Broadway MADRAS.*

எந்தப் புஸ்தகம் வேண்டும்?

தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், சம்ஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வெளியிடப் பட்டுள்ள நூல்களில் எப்புஸ்தகம் தங்களுக்கு வேண்டியபோதிலும், நேரில் எங்களுக்கு எழுதவும். வெளியூர் ஆர்டர்கள் தாமதமின்றி கவனிக்கப்படும்.

வாவிள்ள

ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு சன்ஸ்,

புத்தக வியபாரிகள், எஸ்பிளனேட், சென்னை

குழந்தைகள்

ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், வளரவேண்டுமானால், உலகப்ரசித்திபெற்ற,

"பாலமித்திரா மாத்திரைகளை"

உபயோகியுங்கள். 300 மாத்திரைகள் விலை ரூ. 1—0—0 முழுவிபரங்களுக்கு எங்கள் இலவச புத்தகத்தைப் படியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ பார்மஸி,

26, பிராட்வே, மதராஸ்.

விலை சரசம்! நம்பிக்கையான சரக்கு!

சுதேசாபிமானிகளே! சுதேசி கைத்தொழிலுக்குச் சகாயம் செய்து உங்கள் உற்சாகத்தை விளைவியுங்கள்!

எல்லாவிதமான பெப்பர்மெண்ட்களும் நமது நாட்டிலேயே ஹிந்துக்களால் கையால் தொடாமல் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. விவரங்களுக்கு இதனடியில் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

தி ஈஸ்டன் கன்பெக்ஷனரி மார்ட்,

16, ஆதியப்பநாய்க்கன் தெரு, சென்னை.

எங்கும் புகழ்பெற்ற

A. S.

சுகந்த மூக்குத்தூள்

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் கண்டிக்கும் வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

A. S. சுகந்த மூக்குத்தூள்.

புட்டி 1-க்கு 0—4—0
டஜன் 1-க்கு 2—4—0
சேர் 1-க்கு 3—0—0

M. J. பரிமள மூக்குத்தூள்.

சேர் 1-க்கு 1—8—0
டஜன் 1-க்கு 2—0—0

குணம்மணம்காரம், வாடை முதலியவை ஒருங்கே அமையப்பெற்றது

A. S. பட்டணம் பொடி

சேர் 1-க்கு ரூ. 0—12—0 வீசை 1-க்கு 3—4—0
தபால் சார்ஜ் பிரத்யேகம்.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,

106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை,

P. B. No. 1201, MADRAS. (B)

உங்களுக்கு வேண்டிய காப்பு ஆயுதங்கள்.



இரட்டைக் குழாய் பிரீச் லோடிங் துப்பாக்கிகள்

ஒத்தைக் குழாய் பிரீச் லோடிங் துப்பாக்கிகள்

இரட்டைக் குழாய் கேப் துப்பாக்கிகள்

ஒத்தைக் குழாய் கேப் துப்பாக்கிகள்

ரிவால்வர்கள், பிஸ்டல்கள், சுற்றுக்குழாய்த் துப்பாக்கிகள், தற்காப்புக்குவேண்டிய ஆயுதங்கள், பந்தயவிளையாட்டிற்கு வேண்டிய அழகிய ஆயுதங்கள் முதலியவை எங்களிடம் இருக்கின்றன படங்களுடன் கூடிய காட்லாக் எழுதினால் இனாமாக அனுப்பப்படும். பலவித துப்பாக்கி மருந்துகள் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

என். வி. ராமானுஜம் செட்டி அண்டு கோ,
(1863-ம் வருஷம் ஸ்தாபனம்).
12, பாபம்ஸ் பிராட்வே, மதராஸ்.

விலை நயம்! **பொருள் நயம்!!** **உறுதி திடம்!!!**

கண்களைக்கவரும் பலவித உபயோகப்பொருள்கள் எங்கேகிடைக்கும்?

எலெக்டிரிக் கைவிளக்குகள், பாகெட், ஸைகல் விளக்குகளும், பலவிதமான அழகிய ரப்பர், கற்பூர பொம்மைகளும், காந்தியும், மணமும், குளிர்ச்சியும் மனதைச் சந்துஷ்டி செய்யக்கூடிய நானாவித டாய்லெட் (Toilet) சோப்புகளும் யாவர்க்கும் இன்றியமையாத பொருள்களான பௌண்டன் பேனாக்கள், சாதா பேனாக்கள், மைக்கூடுகள், கடிதங்கள், கார்டுகள், கவர்கள், நோட்டு புத்தகங்களும், தம் இசையிலும் சத்தத்திலும் பெரிய கிராமபோனை நிகர்த்த (Toy) கிராமபோன்களும், கடியாரங்களும், இன்னும் அறிவைப்புகட்டும் ஆங்கில, தமிழ்நூல்கள் முதலியன எங்கள்பால் விலை சரசமாய் கிடைக்கும். கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாசம்:— **குமரன் அண்டு கோ.**
21-B, நடுத்தெரு, "குமார நிலையம்" மைலாப்பூர்.

கக்குவானுக்கு ஹரி தாசர் நெய்

மிகவும்கைகண்டது.

உலகப் பிரசித்திபெற்றது

இதை உபயோகித்தால் 4, 5, நாளில் சுகமாகும். மூன்று மாதம் கஷ்டப்படவேண்டியதில்லை. புட்டி விலை ரூ. 1.
வி. பி. 5 அணா.
சென்னையில் 98, பிராட்வேயிலும் கிடைக்கும்.
மருந்து கேட்லாக் இனாம்.

ஹரி தாசர் காலரா துளி

மருந்தைவிட, மிகவும் நம்பிக்கையான மருந்து காலரா, வாந்திபேதி, விஷபேதி முதலிய வியாதிகளுக்குக் இடையாது. கைகண்டது. தவறாது. ஹரி தாசர் சித்தமருந்துகள் மிகவும் உயர்ந்தவை. கைகண்டவை. புட்டி ரூ. 1—4—0.

டாக்டர் ஹரிதாசர்,
B.A., L.T., M.T.S.C.,
தாசர் சித்த வைத்திய சாலை,
தின்னனூர், R.S.

மூன்று பிரசித்திபெற்ற ஔஷதங்கள்

வியாதியஸ்தருக்கு அமிர்தம் போன்றவை.

மலேரியா ஜுரமாத்திரை:—எல்லாவிதமான மலேரியா ஜுரங்களுக்கும், தீராத ஜுரத்துக்கும், முறை ஜுரத்துக்கும், பித்த ஜுரத்துக்கும், குளிர் ஜுரத்துக்கும், ஜுரக்கட்டிக்கும் பிரசித்திபெற்ற ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 1—0—0.

சுவாசகாச நிவாரணம்:—சுவாச காசத்துக்கும், மார்சளி நோய்க்கும், ஈழை நோய்க்கும், டிப்தேரியாவுக்கும் கைகண்டமருந்து புட்டி ஒன்றுக்கு ரூபா 1—0—0.

கக்குவானுக்கு மருந்து:—நம்பிக்கையான மருந்து சீக்கிரத்தில் குணமளிப்பது. புட்டி ஒன்றுக்கு ரூபா 1. வி. பி. பாக்கிங் செலவு வேறு. (குழந்தைகளுடைய கஷ்டத்தை நீக்கத்தக்க மருந்து).

ஏஜண்டுகள் தேவை.

கிடைக்குமிடம்— **ஜி. எஸ். ஸ்டையர்ஸ்,**
நெ. 21, எர்ரபாலு செட்டித் தெரு, ஜி டி. மதராஸ்.

தமிழ் நூல்கள்.

*எமது காரியாலயத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.	பை.
சதகங்கள் (குறிப்புரையுடன்).			
குமரேசசதகம்	0	5	0
கோவிந்தசதகம்	0	2	0
அறப்பளீசுர சதகம்	0	5	0
திருவேங்கட சதகம்	0	5	0
தண்டலையார் சதகம்	0	3	0
பாராயண நூல்கள் (குறிப்புரையுடன்).			
கந்தர் கலிவெண்பா	0	1	6
சரஸ்வதி அந்தாதி	0	1	6
அபிராமி அந்தாதி	0	1	6
கந்தரனுபூதி	0	1	6
திருமுருகாற்றுப்படை	0	2	0
நால்வர் நான்மணிமாலை	0	1	6
விநாயகர் அகவல்	0	1	0
இலக்குமி தோத்திரம்	0	1	0
ஆனந்தலகரி	0	1	6
சௌந்தரியலகரி ,, ...	0	1	6
நீதிநூல்கள் (குறிப்புரையுடன்).			
திருக்குறள்	0	8	0
நாலடியார்	0	6	0
நீதிநெறி விளக்கம்	0	1	6
ஆசாரக்கோவை	0	2	0
(பதவுரையுடன்).			
வாக்குண்டாம்	0	1	6
கொன்றைவேந்தன்	0	1	6
வெற்றிவேற்கை	0	1	6
நல்வழி	0	1	6
நன்னெறி	0	1	6
திருக்குறள் (பரிமேலழகர் உரை)	2	0	0

	ரூ.	அ.	பை.
க் திருதுறள் விளக்கும் நூல்கள் (குறிப்புரையுடன்).			
சிவசிவ வெண்பா	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா	0	2	0
இரங்கேசவெண்பா	0	2	6
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6
திரட்டு நூல்கள்.			
திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	6
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத்திரட்டு	0	10	0
இலக்கணமும், நிகண்டும்.			
நன்னூல்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பாலபோத இலக்கணம்	1	0	0
வசன நூல்கள்.			
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்ட வாசகம்	0	5	0
விநோதரசமஞ்சரி	0	8	0
பரமார்த்த குரு கதை	0	4	0
*சாவித்திரி சரித்திரம்	0	6	0
பஞ்சதந்திரம்	0	8	0
இராஜரிஷி (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்) ...	1	4	0
ரூவெங்கார்	1	8	0
மகாதேவன் ஒரு இனிய தமிழ் நாவல் ...	0	12	0
பாரதவசனம் ஆதிபர்வம்	3	8	0

V. RAMASWAMY SASTRULU & SONS,
Book Sellers & Publishers,
292, Esplanade, Madras.

|| क्रय्यसंस्कृतपुस्तकानि ||

	रू.	आ.
संस्कृतबालशिक्षा आन्ध्रलिप्या समलंकृता श्रीरामायणसंग्रहसहिता च संस्कृतान्ध्राक्षरजिज्ञासूनामत्युपयोगिनी	०	३
हिन्दी तेलुगु बालशिक्षा	०	३
,, प्रथमवाचकम्	०	८
संस्कृतान्ध्रवर्णबोधिनी पत्रफलका	०	२
सरस्वतीप्रार्थना, श्यामलादण्डकम्, नवरत्नमाला च	०	२
शब्दमञ्जरी, (दृढपत्रात्मिका)	०	६
अमरकोशः	०	८
हितोपदेशः	०	१२
रघुवंशमहाकाव्यम् सव्याख्यानम्	१	४
मेघसन्देशः ,,	०	८
भोजचरित्रम्	....	
विक्रमार्कचरित्रम्	०	१०
व्रतरत्नाकरः	१	८
महाकविबोधायनकृत भगवदज्जुकनाटकम्	०	६
अभिज्ञानशाकुन्तलनाटकम्	....	
भर्तृहरिशतकत्रयम्, मूलम्	०	८
बालरामायणम्	०	२
विवेकचूडामणिः	०	८
रामकर्णामृतम्	०	८
श्रीकृष्णकर्णामृतम्	०	६
,, आंध्रानुवादसहितम्	१	८

शिवकवचम्	०	२
शिवानन्दलहरी	०	२
आदित्यहृदयम्	०	१
श्रीगोविन्दद्वादश (चतुर्दश) मञ्जरिकास्तोत्रम्	०	१
श्रीलक्ष्मीनारायणहृदयम्	०	३
पञ्चसूक्तानि	०	२
रुद्रनमकचमकम्	०	२
यजुर्वेदसन्ध्यावन्दनम्	०	२
यजुर्वेदाह्निकम्	०	२
श्रीवैष्णवाह्निकम्	०	६
सूर्यनमस्कारमन्त्राः त्र्युचब्रह्मयज्ञसहितास्सस्वराश्च	०	१
श्रीदक्षिणामूर्तिस्तोत्रम्	०	१
आळवन्दारुस्तोत्रम्	०	१
सौन्दर्यलहरीस्तोत्रम्	०	२
लक्ष्मीनृसिंहस्तोत्रम्	०	१
देवीस्तोत्रकदम्बः	०	६
मुकुन्दमाला	०	१
बृहत्स्तोत्ररत्नाकरे प्रथमभागः	२	०
बृहत्स्तोत्ररत्नाकरः (द्वितीयभागः)	....	
श्रीमद्रामायणे बालकाण्डः	१	०
,, सुन्दरकाण्डः	१	०
,, अयोध्याकाण्डः	१	८
,, आरण्यकाण्डः	....	
,, किष्किन्धाकाण्डः	....	
,, युद्धकाण्डः	....	

गद्यत्रयम्		०	३
ब्रह्मसूत्राणि, मूलमात्रम्		०	२
भगवद्गीता मूलमात्रम्		०	४
विष्णुसहस्रनामस्तोत्रम् (नामावळीसहितम्)		०	४
ललितासहस्रनामस्तोत्रम्	,,	०	६
लक्ष्मीसहस्रनामस्तोत्रम्	,,	०	४
सुब्रह्मण्यसहस्रनामस्तोत्रम्	,,	०	४
शिवसहस्रनामस्तोत्रम्	,,	०	४
वेङ्कटेशसहस्रनामस्तोत्रम्	,,	०	४
अन्नपूर्णासहस्रनामस्तोत्रम्	,,	०	४
आंजनेयसहस्रनामस्तोत्रम्	,,	०	४
गणपतिसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीरामसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीकृष्णसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीगोपालसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीलक्ष्मीनृसिंहसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीवटुकभैरवसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीभवानीसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीकालिकासहस्रनामस्तोत्रम्	,,	०	४

वाविळ्ळ रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्,

२९२, एस्प्लनेड्, मद्रास्.

செந்திலாண்டவன் திருவடி துணை.

சிதம்பரம் ஆருத்ரா தரிசன வைபவம்.



இராகம்—இந்துஸ்தானி—ஆதிதாளம்.

நீடிய வேதந் தேடிய பாதம்
நேடிய கீதம் பாடிய பாதம்
ஆடிய போதங் கூடிய பாதம்
ஆடிய பாதம் ஆடிய பாதம்.

சஞ்சித பாதஞ் செஞ்சித பாதம்
தஞ்சித பாதம் சஞ்சித பாதம்
கொஞ்சி மேவும் ரஞ்சித பாதம்
குஞ்சித பாதம் குஞ்சித பாதம்.

எண்ணிய நானே திண்ணிய னேனே
எண்ணிய வாறே நண்ணிய பேறே
புண்ணிய னேனே அண்ணிய னேனே
புண்ணிய வானே பண்ணிய வானே. (திருவருட்பா)

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 11	1929வருஷ ஜனவரி மாதம்	பகுதி 1

தெய்வ வணக்கம்

"மாமேவு நவரத்ன கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்தமுடியும்
வச்சிர நுதற்றிலக வெண்ணீறு மோராறு
வதனவிம் பத்தினழகும்
பாமேவு பக்தர்க்கு மடைதிறந் தன்பொழுகு
பன்னிருவிழிக் கருணையும்
பகரரிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப்
பவளஞ் சிறந்தவாயும்
காமேவு கரகமல பந்தியுஞ் சேவலும்
கனகமயிலுங் கிண்கிணிக்
காலு மூந்நூலும் வடிவேலு மென்மேலுமெக்
காலுந் துலங்க வருவாய்
தாமோதராநந்த கோவிந்த வைகுந்த
ஸரஸ கோபாலன்மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுரு வாய்வந்த
சரவணபவா நந்தனே" (சுப்ரமண்யதேசிகர்)

2.10770

ஹிதோபதேசம்

(1) தன்னிடம் வந்து இல்லை யென்று கேட்பவர்க்கு அவர் மனமகிழ அன்புடன் தன்னாலியன்றதைக் கொடுத்துதவும் ஒரு கொடையாளியின் கையிலுள்ள பொருள், தேர்ந்த உணர்ச்சியுடைய ஒருவன் கல்வியைக் கசடறக்கற்றுத் தெளிந்து அதினாலடையப் பெற்ற ஒரு சிறந்த அறிவுக்குச் சமானமாகும்.

(2) நாணமுடைய ஒரு பெண்ணின் பதிவிரதா குணத்தினழகு, போர்செய்யும் திறமைவாய்ந்த ஒரு அறிவாளியினுடைய கையிலேகொண்ட ஒரு வாளாயுதத்திற்கு நிகராகும்.

(3) தேர்ந்த மன உணர்ச்சியை யுடையவன் படிப்பினாலடையப் பெற்ற அறிவானது, கற்பவர் பலருக்கும் பலனைக் கொடுக்கும். அதுபோல் ஏழைக்கிரங்கி இல்லையென்னாது கொடுக்கும் ஒரு கொடையாளியினுடைய கைப்பொருளும் தரித்திரர் பலருக்கும் பயனைக் கொடுப்பதாகும்.

(4) அறிவாளியான ஒரு போர்வீரன் கையிற்கொண்ட வாளானது பலரும் புகழ்தற்குரிய பெருமையைத் தன் வெற்றியினாலடையும். அதுபோலவே நாணமுடையவள் பெற்றுள்ள பதிவிரதாகுணத்தினழகு பலரும் புகழ்வதற் குரியதாகுமென்றுணர்வீராக.

(5) நாலுபேர் கூடியிருக்கும் இடத்துக்கு அழைக்கப்பட்டாலன்றி நாம் போவதுகூடாது. போனால், அங்குள்ளார் கூறுவதைக் கவனித்துக்கொண்டு சும்மாவிருக்கவேண்டும். அவசரப்பட்டு வாயைத்திறந்து ஏதேனும்சொல்வது கூடாது. அப்படிச்சொல்வது சரியாயிருந்தால் மரியாதை அடையலாம். தவறாயிருந்தால் அவமானமுண்டாகுமல்லவா ?—

(6) நம்மிடத்தில் ஒருவர் பேசினால் அவர் பேசுவதை நாம் கவனியாதவன் போலிருப்பது கூடாது. அது பெருந்தவறு. அன்றியும் அது அவரை அவமானம் செய்தற்குச்

சமானமாகும்—துக்கங்கொண்டாடுகிறவனுக்கு முன்னே சிரிப்பதற்குச் சமானமாகும். சில முரடர்கள், நான் பேசுகிறேன் வாய் ஓயாமல்—கவனியாமல் என்னை அவமானப்படுத்துகிறாயா—என்று சில சமயம் அடித்துவிடுவார்கள்.

(7) குரூர சுபாவமுடைய மானிடர்கள் சிலசமயங்களில் தங்கள் உறவினரையுங்கூடக் கவனிப்பதில்லை. லோபகுணமுடையவர், எப்போதும் எந்தக் காலத்திலும் தங்கள் உறவினரையேயன்றித் தங்களுக்குப் பரம உபகாரஞ்செய்தவர்களையும் கவனிப்பதில்லை. சமயம்வந்தால் தம்முடைய மனிதர் என்பதையுங் கவனியாமல் பிரபராதியின் மேலும் குற்றஞ்சுமத்தி மகிழும் போலீஸாரை மேற்கூறிய இருவர்பங்கிலும் சேர்ப்பதற்கில்லை.

(8) குலஸ்திரீகள் ஆபத்துக்காலத்திலும் பதிவிரதாதருமத்தைக் கைவிடுவதில்லை. கணவனுடைய க்ஷேமத்திலும் தங்கள் க்ஷேமம் பெரிதென்று கவனிப்பதில்லை. வியபசாரிக்குத் தன்னை மணந்தவனையன்றி மற்றும் தாய்தந்தையருங்கூட உறவினராவதில்லை.

(9) வட்டிக்குப் பணம் கொடுப்பவன் "ஐயோ வட்டி வளர்வதற்குமுன் பணம் கைக்குவந்துவிட்டதே" என்று கவலைப்படுகிறான். குடிப்பவன் இன்னும் குடிப்பதற்குப் பொருளில்லையே என்று வருத்தப்படுவான். குலஸ்திரீ தன் மாமி மாமன்மார்களுக்கும் கணவனுக்கும் சிஷ்ருஷை செய்வதற்கில்லையேயென்று வருத்தப்படுவாள். உத்தம மாணாக்கர்கள் இன்னும் படிப்பதற்கில்லாமல் பொழுதுபோய்விட்டதேயென்று வருத்தப்படுவார்கள். ஆனால் மூடன் ஒன்றுக்கும் வருத்தப்படுவதில்லை.

(10) பகவன்நாமஸங்கீர்த்தனம் அளவற்ற புண்ணியத்தைக் கொடுக்கும். இதனாலேதான் "அவனே இவனே என்று கூறுவதைவிட்டுச் சிவனே சிவனே என்று கூறு" என்கிறார்கள் பெரியோர்கள்.

முன்னொரு காலத்தில் ஒரு மன்னன் ஒரு பிராமணனைக் கொன்றுவிட்டான். அவனைப் பிர்ஹ்மஹத்தி பிடித்துக் கொண்டது. பின் அவ்வரசன் ஒரு மகரிஷியின் ஆச்ரமமடைந்து, அங்கே இருந்த ரிஷியின் புத்திரனிடம் தான் செய்த தப்பிதத்தையும் அதனால் தனக்கு நேரிட்டுள்ள துன்பத்தையும் சொல்லி, "நான் எப்படி இந்தத் துன்பந்தீர்ந்து உய்வேன்?" என்று கேட்டு மனம் வருந்தினான்.

ரிஷிபுத்திரன்.—வேந்தனே, நீர் மூன்று முறை சிவநாமத்தைச் சொல்வீராயின் உம்மைத் தொடரும் பிர்ஹ்மத்தி உம்மைவிட்டு நீங்கும்" என்றான்.

இச்சமயத்தில் வெளியே போயிருந்த அவனுடைய தந்தையாகிய மகரிஷி வந்துசேர்ந்தார். அவர் தம்முடைய மைந்தனைப் பார்த்துக் கோபத்துடன், "பேதாய், என்ன சொன்னாய்? ஒருதரம் சிவ என்றால் கீழ்சென்ற கணக்கற்ற ஜென்மங்களிலே செய்தபாவம் பறக்குமே! என் மும்முறை சிவ என்று கூறு எனப் போதித்தாய்? அதற்காகப் பிடி சாபம்"—என்றார், என்று ஹிதிகாசம் கூறுகின்றது. ஆதலின் மெய்யான பக்தியுடன் பகவந்நாமஸங்கீர்த்தனம் செய்பவர்கள், பாவங்களிலிருந்து விடுபட்டு மோக்ஷமடைவர் என்பதில் ஐயமுண்டோ?—இல்லை, இல்லை.

(11) ஒருவனை நல்லவனாக்கி வைப்பதும் நாக்கே! கெட்டவனாக்கி வைப்பதும் நாக்கேயாம்—அதனாலேதான்—தமிழ் வேதம்—

"யாகாவாராயினும் நாகாக்கக்காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு"—என்று நீதி போதித்தது.

பாலவிநோதினியின்
பதினோராவதாண்டு விஜயம்

பாலவிநோதினி அல்லது குழந்தைகளின் அன்பன் என்னும் மாதாந்தப் பத்திரிகைக்கு இவ்வருஷம் பதினோராவதாண்டு ஆகிறது. பத்து வருஷமாகப் பாலவிநோதினியை வாங்கித் தங்கள் குழந்தைகளின் கையில் ஹஸ்தபூஷணமாக விளங்கவைத்து ஆதரித்து வரும் ஆயிரக்கணக்கான சந்தாநேயர்களும் இதினுடைய சிறப்பையும் போக்கையும் போதனையின் அழகையும் நன்குணர்வார்களாதலால், அவர்கள் இந்தப் பத்திரிகை, பத்துவருஷமாக மலைமேல் இட்ட விளக்கைப்போல் விளங்கிவந்து இப்போது பதினோராவதாண்டிலும் அத்தகைய அரிய உபதேசங்களைப் பிரசாரப்படுத்த முன்வந்திருப்பதைக் காணும்போது, "இப்பத்திரிகை நீடூழிவாழவும் இதன் ஆசிரியர் நீடூழிவாழவும் இதனைப் பதிப்பித்துதவும் முதலாளி நீடூழிவாழவும் எல்லாம் வல்ல இறைவன் கருணை புரிவானாக" என்று பிரார்த்தியாமலிருக்கமாட்டார்களென்று நம்புகிறோம்.

எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளாலே, தான் இத்தனை உயர்நலமடைந்திருப்பதைக் கருதி, பாலவிநோதினி மிகுந்த உற்சாகத்துடன்—

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

என்னும் போதனையைத் தனக்குக் கவசமாகப் பூண்டு—

“தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது” என்றும்
“கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” என்றும்—
“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்” என்றும்

வெளிவந்துள்ள வேதமொழிகளைத் தன்னாலியன்ற வரையில், சிறுசிறு கதைகள் மூலமாயும் பெரியாருடைய அமுதவாக்கினாலும் யுக்திவாயிலாலும் இனிய மொழிகளாலும் விளங்கவைத்து உலகின்புறக் கண்டு தானுமின்புற வேண்டுமென்கிற நோக்கங்கொண்டிருக்கின்றமையால், இதுகாறும் இதனை ஆதரித்து வரும் அன்பர்களும் கனதனவான்களும் கலாசாலை மாணவர்களும் மாதரிசிகளும் போதகாசிரியர்களும் பிரமுகர்களும் இதனிடம் எப்போதும் கொள்ளும் அன்புகொண்டு பிழைகள் பொறுத்து ஆதரிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம். அன்றியும் இதனிடத்தன்பு பூண்டாரனைவரும் இதனுடைய தன்மையைத் தமது நண்பர்கட்கு விளக்கி அவர்களுடைய ஆதரவும் ஏற்படுமாறு அநுக்கிரஹம் செய்யச் சிறிது சிரத்தை யெடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இதனை இதுகாறும் ஆதரித்துவந்த சந்தா நேயர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம் செலுத்தி—எமது வழிபடுகடவுளும் எமக்கு எந்தநேரத்திலும் எந்த

இடத்திலும் எடுத்துக்கொண்ட முயற்சி இனிது முடியத் தக்கபடி அருள்புரிந்து ஆதரிக்கும்—எமதையன், பன்னிருகையன், பரமகருணாநிதியாகிய செந்திலாண்டவனை இச்சமயம் நினைத்து—

“சீல நலமுடைய சீரியரும் மேலதெனப்
பால விநோதினியின் பண்புயரக்—கோலமயில்
மேலிருக்கும் செந்தில்வடி வேலவனின் தூயதுணைக்
காலிருக்கும் இங்கெமக்குக் காப்பு”

எனத் துதிக்கின்றோம்.

திரு. அ. சுப்ரமண்யபாரதி.

வித்தை.

வித்தை அன்னையைப்போல் ஆதரிக்கும்; தந்தையைப்போல் புத்தி கற்பிக்கும்; அன்புடைய மனைவியைப்போல் மனச் சஞ்சலத்தைப் போக்கும்; எங்கும் கீர்த்தியை உண்டாக்கும். வித்தை மனிதனுக்கு அழகைக் கொடுக்கிறது. அது மறைத்து வைக்கப்பட்ட புதையலுக்குச் சமானம். அந்ய தேசங்களில் பந்துவைப்போல் அது உதவிபுரிகின்றது; அரசர்களும் மதிக்கத்தக்க பெருமையைத் தருகிறது. வித்தையில்லாதவன் பசுவுக்குச் சமானமாவன்.

இன்சொல் இடர்ப்படுப் பதில்

இனிய நல்மொழிசொல்

முன் காலத்தில் ஒரு பிராமணன் ஒரு வனத்திலே போய்க்கொண்டிருந்தான். அவன் நல்ல குணங்களுக்கெல்லாம் இருப்பிடம்போல் விளங்கினான். அவனிடம் விளங்கிய நல்ல குணங்களில், எல்லாப் பிராணிகளிடத்திலும் கிருபை காட்டுவதாகிய உயர்ந்த குணமும் ஒன்று.

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"—

என்று தமிழ் வேதம் பிராமணர்களுக்கு உரிய இலட்சணம் கூறுகின்றதன்றோ?—

அப்பொழுது அங்கே தாருணன் என்னும் பெயர் கொண்ட அரக்கனொருவன் வந்தான். அவன் மூன்று நாட்களாய்ப் பட்டினி. அவனுக்கு அப்பக்கங்களிலெங்கும் ஆகாரமே அகப்படவில்லை. காதடைத்துக் கால் சோரும்படியான பசி உபத்திரவம் அவனைப் பாதிக்கிறது. வயிற்றை எக்கியவண்ணம் நாவுலர்ந்தவனாய் அவன் "எந்தப் பிராணி நமக்கு இரையாக அகப்படும்" என்ற ஆவலுடன் இருக்கிறான்.

அந்த அரக்கன் இந்தப் பிராமணனைச் சந்தித்தான். சந்தித்ததும் ஓங்கிக் கனைத்து இரண்டு கரங்களை

யும் விரித்து, தடுத்துப் பிடித்துக்கொண்டான். அப்போது சகல வேதாகமபுராணங்களையும் நன்றாயாராய்ந்தறிந்து நிபுணத்வம் பெற்றுத் தெளிந்த மனதுடன் விளங்கும் அந்த அந்தணன், சற்றேனும் முகஞ்சுளிக்காமல், சித்தங்கலங்காமல், உடல் துடிக்காமல், உடல் சோராமல், மிகவும் கோபிக்காமல் ஆநந்தநடனம் புரிகின்ற ஆதிமூர்த்தியைப்போல் சோதிகாட்டி நகைத்துச் சிறிதும் துயரமில்லாதவரா யிருந்தார்.

அந்தணருடைய அந்த நிலைமையைக் கண்ட தாருணன் என்னும் அவ்வரக்கன், மதிமயங்கி, மகிழ்ச்சியடங்கி, புத்திகலங்கி "இவர் எப்படிப்பட்ட பெரியாரோ, எத்தன்மையுடையவரோ" என ஐயமுற்று, "ஆகாகா பிராமணன் பயமில்லாமல் நகைக்கின்றானே! முகமலர்ச்சியுடனிருக்கின்றானே! இஃதென்ன விந்தை!" என்று வியந்தவண்ணம் அவரைப் பிடித்துக்கொண்டிருந்த கரங்கள் தாமே நழுவ, பசிநோயினாலெழுந்த கோபமடங்க அவரை நோக்கி, "ஐயா, எனக்குப் பசியும் ஆயாசமும் உளைப்பும், களைப்பும், வெளுப்பும் விதிர்ப்பும் வர வேண்டிய காரணமென்ன? இதனை நீங்கள் நன்றாய் ஓர்ந்து சொல்வீரானால் உம்மைக் கொல்லாமல் அகல்வேன்; இல்லாவிட்டால் என் பசிக்கு எப்படியும் உம்மைத் தின்பேன். கொல்வதற்கு முன் நான்கேட்ட சங்கைக்கு உத்தரவு சொல்லும்" என்றான்.

அம்மொழி கேட்ட அந்தணன் சிறிதும் அஞ்சாமல் புன்னகையுடன் அவ்வரக்கனை நோக்கி, ஸர்வ

பூதங்களிடத்திலும் ஈச்வரன் ஸாந்நித்யமாய் இருக்கிறான் என்கிற உணர்வுடையவனாதலால் இரக்கங்கொண்டு சொல்லுகிறான்—

அப்பா குணவானே கேள்—தேகம் புஷ்டியாய்ப் பருக்காமல் உலர்ந்துபோவது காசமென்கிற நோயின் காரணத்தினாலேயாம். உடல் வெளுத்து மெலிந்து காட்டுவதெல்லாம் பாண்டு என்னும் ரோகத்தின் பான்மையாம். இந்த ரோகங்கள் வருவதற்கு ஏது என்னவென்றால் கூறுகிறேன் கேள்—

(1) தன்னுடைய சுற்றத்தார், மித்திரர், தரித்திரர்—இவர்கள் மனங்கலங்கக் கடிந்து பேசுவது.

(2) அவர்கள் வயிறெரிந்து மனம் புகைந்து மள மளவென்று கண்ணீர் சொரிந்து அழும்படி செய்வது.

(3) ஒருவன் உண்ணும்போது அவனுடைய மிடரைப் பிடிப்பது.

(4) தாய்தந்தையரையும் தமையனையும் பழித்துப் பேசுதல்.

(5) அவர்களைப் பலவிதமாய் ஏசிச் சஞ்சலத்திற்குள்ளாக்குவது.

(6) தான் பெற்ற ஜயத்தைத் தானே ராஜ சமுகத்திற் புகழ்ந்து பேசிக்கொள்வது.

(7) தன்னை அடுத்தவனை ஆபத்காலத்திற் கைவிடுவது.

(8) உதவிசெய்யாமலே, நான் செய்த உதவியால் பிழைத்தானென்று விருதாவில் புகழ்ந்து பேசிக்கொள்வது.

(9) செய்த உதவியைச் சொல்லிக் காட்டுவது.

(10) கல்லாத மூடன் கற்றவனைப் புகழ்ந்து சந்தோஷப்படாமல் இகழ்தல்.

(11) தேடிய திரவியத்தைப் பெரியவர்களுக்குதவுதல், ஏழைகளுக்குதவுதல் முதலிய நல்ல வழிகளிலே செலவழிக்காமல் தீயநெறியில் வீணாக்குதல்.

(12) உலோபகுணத்தினால் தன் மனைவிமக்களுக்கு வயிறாரச் சோறுபோடாமலும் தான் உண்டு உடுக்காமலும் தனக்கினியரானவரை அன்பாயுபசரியாமலுமிருந்து காசே பெரிதெனக் குணபேதங்கொண்டலைதல்.

(13) வீண்விசாரங்கொண்டு மனத்தைக் கெடுத்துக் கொள்வது.

(14) நன்றாயிருப்பவரைப் பார்த்து பொறாமைப்படுவது.

(15) தேவர்கள் — நல்லோர்கள் — பெரியோர் —இவர்களை நிந்தனை பண்ணுவது.

ஆகிய இவைபோன்ற மகா பாபங்களினாலே, பசி, ஆயாசம், இளைப்பு, களைப்பு, வெளுப்பு, விதிர்விதிர்ப்பு, —இவைகளுண்டாகின்றன—என்றார்.

இப்படி அழகிய இன்சொற்களாலே ஹிதோபதேசம் செய்யவே அரக்கன் பரமசந்தோஷமடைந்தான்; ஆச்சரியமுமடைந்தான். சந்தோஷமும் ஆச்சரியமும் மேலிடவே பசி இருந்த இடந்தெரியாமற் போய்விட்டது. "சந்தோஷமே சஞ்சீவி" என்று பழமொழி வழங்குகிறதல்லவா?—

பசி இவ்வாறு தீரவே அரக்கன் அந்தணனைப் பணிந்து, "ஸ்வாமி, நான் பரமசந்தோஷமடைந்தேன். உம்முடைய ஹிதோபதேசமே என்பசிக்களைப்பை நீக்கிவிட்டது. இனி நான் உம்மைக் கொன்றுதின்ன வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆதலால் உம்மைப் பணிகின்றேன். நீர் உமது வழியே செல்லலாம்" என்று கூறிச் சென்றான்.

பிள்ளைகளே—தானம் என்பது ஒருவர் இன்னொருவனுக்குத் தன் மனம் விரும்பி ஒன்றை இனாமாகக் கொடுப்பது. கொடுக்கிறவனுக்குக் குலசம்பந்தத்தாற் குணமிருக்கும். குணம் எவ்வளவிருக்குமோ அவ்வளவுக்குக் கல்வி விளங்கும்: கல்வி எம்மாத்திரம் கற்றானோ அம்மாத்திரம் பேரறிவு பிரகாசிக்கும். பேரறிவு எம்மட்டோ அம்மட்டு தெளிவுண்டாகும். தெளிவுக்குத் தக்கபடி சேர்க்கையுண்டாகும். சேர்க்கைக்குத் தக்கபடி ஈகைக்குணம் ஏற்படும். ஈகையில் எப்படி ஞானம் விளங்குகிறதோ அவ்வண்ணமே பலனும் ஏற்படும்—இந்த தானத்தைவிட மேலான தருமொன்றுண்டு. அது வந்தவர்களை உபசரித்து வணங்கி அன்பு

பாராட்டித் தேன் சொரிவதுபோற் பேசி உபசரிப்பது. இது பெரிய தானம். சத்து, சித்து, ஆநந்தம் என்னும் மூன்று குணங்களுண்டு. அவைகளில் சத்தென்பது சாத்விக குணம். இது, ஆங்காரம் அடங்கிப் பொறுமையொடுங்கி, அவா ஒழிந்து நான், எனது என்கிற தேகாபிமானமற்றுப் பெண்டுபிள்ளைகளெல்லாம் சந்தைக் கூட்டமெனக் கண்டு சர்வபூதங்களிடத்திலேயும் தயை வைத்து எல்லோருக்கும் இனிய வழியில் நடப்பவனுடைய உள்ளத்திலேயே பிரகாசிக்கும்.

இந்தச் சாத்விககுணத்தை யடையவே நீங்கள் பாடுபடவேண்டும். இந்த குணமுடையவனுக்கே இனியமொழி பேசி எல்லோரிடமும் அன்பு பாராட்டும் தன்மை ஏற்படும்.

லஞ்சம்

(391-ம் பக்கத்தொடர்ச்சி)

பாழில் இறைத்த ஜலம்போல் உமக்கும்
பரிசளித்தாவதுண்டோ துரை தீர்ப்புப்
பண்ணுவதும்மைக்கொண்டோ வெட்கமின்றி
ஏழைகளிடத்தில் கைக்கூலிவாங்க
இச்சைகொண்டீர் என்னகேலி—வந்து
சூழுமே பலபல ஜோலி நிஜம்
துரையே அறிந்தால் உங்கள் உத்தியோகமே காலி
(எதுக்கு)

உழக்கிற் கிழக்குமேற்குண்டாக்கி ஒருகாலே
ஊரைப் புரட்டுகிறீர் விவாதிக்கும்
பேரை மருட்டுகிறீர் நிச்சயமுண்டோ
வழுக்குச்சேற்றினில் நட்டகம்பம் பிச்சை
வாங்கியும் உமக்கென்ன டம்பம்—ஞாயம்
இழக்கின்றபேர் படுந்துன்பம்—உமக்
கிசைந்திடுஞ் செல்வத்தை அறுத்திடும் ரம்பம் (எதுக்கு)

(வரும்)

(வேதநாயகம்பிள்ளை கீர்த்தனை)

வருஷப் பிறப்பு

I

மலர் நிகர் மங்கலம் படைத்து மண்ணில்
நலமார் கனவு தருமோர் நன்னசை
யென்னும் பேரினள் எழிலார் மங்கை
பொன்னேர் முகத்துப் பொலியு முறுவல்
மான வருமோர் புதிய வாண்டே!
கானத் திருள்செங் கதிரோ னொளியான்
மறைந்து மடியு மாட்சி போல,
கறைசேர் கருத்திற் காணருங் குகையில்
தங்குந் தகைவில் லாசை தவிர்த்துப்
பொங்கிய தீமை பொருந்து மனமும்
போரினை நாடும் பொல்லாக் கரமும்
பேரினைச் சிதைக்கும் பேயின் நாவும்
படைத்த பழைய வாண்டு மடிய
மணிகள் முழங்கி யதிர
மண்மேல் மிளிர்வாய் மங்கலவாண்டே

II

புனித மாய்வரு புதிய வாண்டே
முடிவில் கால மென்னும் வழிசெலும்
வட்டச் சகட வண்ணக் காலே!
புவியிற் புதிய ஞானம் பூக்கவும்
எங்குஞ் சுதந்திர வாஞ்சை யெழவும்

சோர்வில் சோதர பாவந் தோன்றிக்
கார்போ லுலகிற் கருணை மிகவும்
ஒத்தா ருயர்ந்தார் தாழ்ந்தார் என்னும்
பித்தர் பிதற்றல் மாய்த்து மீக்கொள்
சர்வ சமரச பாவந் தழைத்து,
தத்தம் மனையிற் றங்கு முரிமை
கருத்தி னினைவு கழறு முரிமை
கலைகள் பயிலுங் கல்வி யுரிமை
பயின்ற கலையிற் பயிலு முரிமை
மதியுங் கையும் படைத்த படப்பை
மனித ரெவர்க்கு முரிதாக்கு முறைமை
எல்லாம் வல்ல எம்முடை யிறைவன்
எழிலார் கழற்கே யேதமி லன்பு
என்றிவை போன்றன யின்றே யெந்தாய்
நாட்டில் தழைத்துப் பெருகித் தரும
மங்கை கொலுவில் மாணுற வமர
வருவாய்! வானவர் வாழ்த்தும்
அருளாம் பரம னளித்த ஆண்டே.

P.R.R.C.

“பரோபகாரம் ஹிதம்சரீரம்.”

என்று பெரியார் கூறுகிறார்களாதலால், உடம்பெடுத்தவன் பிறருக்கு உபகாரியா யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவன்தான் உடம்பெடுத்ததன் பயனை அடைந்தவனாவான்.

தெய்வ பக்தி

தெய்வம் ஒருவரால் சிருஷ்டிக்கப் படாதது; எங்கும் பரிபூர்ணமாய் நிறைந்து விளங்குவது; என்றுமுள்ளது; எல்லாந் தானாய் இலகுவது; அடியார்க்கு எளியது. அது பக்தர்களுடைய அறிவின் விளக்கத்துக்கும் பக்திக்கும் தக்கபடி அவரவர் கருதும் நாமரூபங்களை ஏற்று வழிபாட்டை ஏற்றுக் கொண்டு அநுக்ரஹம் புரிகின்றது.

அதனைச் சிலர் சிவன் என்றும், சிலர் விஷ்ணு என்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஏசுநாதர்—என்றும் கூறுவர். சிலர் உருவம் வைத்தும் சிலர் வைக்காமலும் வழிபடுவர். அதனை யார் எப்படி எந்தப் பெயரிட்டு வழிபட்டாலும் அது பக்திக்குக் கட்டுப்பட்டு அன்பர் விரும்புவதை அளித்துக் காப்பாற்றும்—அது—

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே."

என்று திருமந்திரம் என்னும் உயர்ந்த நூல் போதிக்கிறபடி அன்புமயமா யிருப்பதாதலால் எந்த பேதமும் பாராட்டுவதற்கில்லை. பேதம் பாராட்டுவது அக்ஞான

மாகும். அன்றியும் சைவன் வைஷ்ணவனைப் பழிப்பதும், வைஷ்ணவன் சைவனைப் பழிப்பதும் இப்படி ஒரு மதத்தான் இன்னொரு மதத்தானைப் பழிப்பதும் வீண் அகங்காரத்தில் விளைவதாகும். ஆதலால் அது பயனில்லாத செய்கை. அதை மறக்கவேண்டும். தெய்வம், ஜாதி, குலம் இவைகளுக்காகப் பரிந்து நில்லாது; எந்த ஜாதியானாலும் எந்த குலத்தினனானாலும் பாபமற்ற சித்தசுத்தியுடன் தன்னிடம் அன்பு செலுத்துகிறவனிடம் தெய்வம் கிருபை செய்யும் தன்மையுடையது. ஆதலால் தெய்வ ஸந்நிதியில், ஜாதிப்பெருமையேனும் குலப்பெருமையேனும் பெருமை அடையாது. பக்தியின் பெருமை ஓங்கிநிற்கும். ஜாதியில் ஈனனென்று கூறப்படும் நந்தன், திருப்பாணாழ்வார், சேனாவிதர்—இன்னாருடைய சரித்திரத்தைக் கவனியுங்கள்.

இன்னொன்று—

ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள மந்திரங்களுக்குத்தான் தெய்வம் கட்டுப்படுமென்பதை மறந்து விடுங்கள். தமிழ் பாஷையில் அன்பு மேலிட்டுப் பாடிய புலவருடைய அருங்கவிகளாலாகிய துதிகளுக்கும் பகவான் இரங்கி அருள்புரிவராதலால், தாயுமானவர், இராமலிங்கஸ்வாமிகள், பட்டினத்தடிகள், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்—இவர்கள் பாடியருளிய திருப்பாடல்களை ஓதித் தெய்வத்தை ஆராதியுங்கள்; துதியுங்கள். தெய்வபக்தி செய்வது நமது முதற்கடமையாகும்.

நமது முன்னோர்கள் தெய்வபக்தியிற் சிறந்திருந்தார்கள். அதனால் அவர்கள் அரிய பெரிய செயல்களை எளிதிலே முடித்தார்கள். அவர்கள் "தெய்வ பலமே பலம்" என்று நம்பியிருந்தார்கள். தெய்வபலமுடைய பாண்டவர்கள் பெருமையடைந்ததையும் தன் பலத்தைப் பெரிதாயெண்ணிய துரியோதனன் நாசமடைந்ததையும் பாரதம் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

A.S.B.

சுகாதார விதிகள்

(1) தினம் இரவு பத்து மணிக்குப் படுக்கைக்குப் போய்விடு.

(2) காலை ஐந்து மணிக்குப் படுக்கையை விட்டெழுந்திரு.

(3) தினம் கிரமமாய் மலஜல விசர்ஜனம் செய். மலஜலத்தை அடக்காதே.

(4) தினந்தவறாமல் ஸ்நானஞ்செய். தோய்த்துலர்ந்த ஆடையை உடுத்து.

(5) திறந்தவெளியில் நடந்துசென்று நல்ல காற்றை உட்கொள். நல்ல சோலைகளையும் கடற்பக்கக் காட்சிகளையும் கண்டு மகிழ்.

(6) பசியெடுத்தபின் புசி. அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடாதே. மிதமாகச் சாப்பிடு.

(7) அஜீரணமும் மலச்சிக்கலும் உண்டாக இடந்தராதே. அவைகளே நோய்களுக்குக் காரணம்.

(8) மனவேதனைக்கு இடங்கொடுக்காதே.

(9) எப்போதும் ஒழுங்கான வழியில் முயற்சிசெய்.

(10) உன்னை நல்லவழியில் நடத்தும்படி கடவுளை தினந்தோறும் வாழ்த்து.

செவிட்டுப் பிறவிகள்

மாதவக்கோன் என்னும் யாதவனொருவன் ஒரு நாளிரவு தன் ஆட்டு மந்தையை ஒரு வயற்புலத்தில் மடக்கிவைத்திருந்தான். அப்போது ஓர் அவசரநிமித்தமாக அவன் தன் வீட்டுக்குப்போய் வரவேண்டியதாக நேர்ந்தது.

மாதவக்கோன் அடுத்த புலத்தில் நெற்போரைக் காத்துக்கொண்டிருந்த சுந்தரனைப் பார்த்து, "அண்ணேன் இம்மந்தையின்மீது ஒரு பார்வை யிருக்கட்டும். வீடுபோய் வந்ததும் உனக்கோர் நொண்டியாடு இனாமாகக் கொடுக்கிறேன்" என்று கேட்டுக்கொண்டான்.

சுந்தரனுக்கு மாதவக்கோன் சொன்னதொன்றும் செவியிற்படவில்லை. அவன் தன் சொந்த வேலையைப் பற்றித் தன் அருகிலிருந்த ஒருவருடன் ஏதோ பேசிக்கொண்டு தலையை அசைத்தபடியிருந்தான். மாதவன் அவன் தலையை அசைப்பது தன்பொருட்டே என்று நினைத்துக்கொண்டு சென்றான்.

அவன் தன் வீடுபோய்த் திரும்பியதும் ஒரு நொண்டியாட்டை இழுத்துக்கொண்டுவந்து, சுந்தரன் முன் விட்டான். சுந்தரன் (கோபங்கொண்டு) "யார் ஓய் உன் ஆட்டின் காலை ஒடித்தது? என் வேலையை நான் பார்த்துக்கொண்டிருந்தேனே ஒழிய உன் மந்தையை

எப்போதாவது ஏறெடுத்துப் பார்த்ததுண்டா? சும்மா வீண்சண்டைக்கு என்னை இழுக்கவேண்டாம். எவன் ஒடித்தானோ அவனிடம் போகலாம்''—என்றான்.

அதற்கு மாதவன், ''நான் நொண்டியாடுதானே இனாமளிப்பதாகச் சொன்னேன். நீ நல்ல ஆட்டைக் கேட்பது நியாயமா?'' என்றான்.

இப்படி இவர்கள் சண்டைபோட்டுக்கொண்டு கொத்தவாலிடம் போனார்கள். கொத்தவால் அப்போது வீட்டில் தன் மனைவியுடன் சண்டை செய்து, "இனி உன் முகத்தில் விழிப்பதில்லை'' என்று வெளியே வந்தான்.

மாதவனும் சுந்தரனும் கொத்தவாலைக் கண்டார்கள். கொத்தவால் அவர்களைப்பார்த்து, "நீங்களேயல்ல இன்னும் பத்துப்பேர் திரண்டுவந்து சமாதானப் படுத்தினாலும் இனி நான் அவள் முகத்தில் விழிப்பேன் என்று நினைக்கவேண்டாம்'' என்றான்.

மாதவன், "நான் நொண்டியாடுதான், இவன் என் மந்தையை நான் கேட்டுக்கொண்டபடி பார்த்துக் கொண்டிருந்ததற்காகக் கொடுப்பதாகச் சொன்னேன். இப்போது இவன் நல்ல ஆடு கேட்கிறான். தயவு செய்து தீரவிசாரித்து நியாயமளிக்கவேண்டும்'' என்றான்.

சுந்தரன்.—ஐயா, கொத்தவாலே, நான் இவன் மந்தையைப் பார்க்கவே யில்லை. என் வேலை எனக்குச் சரியாயிருக்கிறது. திடீரென்று இவன் என்னிடம் வந்து இந்த ஆட்டின்காலை நான் ஒடித்ததாகச் சொல்லு

கிறான். இந்த அநீதத்திற்கு என்ன செய்கிறது. தாங்கள் யோசித்து நியாயம் சொல்லவேண்டும்'' என்றான்.

கொத்தவால்.—வளவள வென்று என்னிடம் பேச வேண்டாம். அவள் கெட்டாளே, ஒரு பொட்டைச் சிறுக்கிக்கு இவ்வளவு அகங்காரமா?—தயவுசெய்து நீங்கள் வீட்டுக்குப் போகலாம். என்ன சமாதானம் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். இனி அவள் முகத்தில் விழிக்கவும் மாட்டேன்'' என்றான்.

மாதவன்.—கொத்தவாலை நோக்கித் தாங்கள் ஒரு பக்கமாய்ப் பேசக்கூடாது. சுந்தரன் நல்ல ஆட்டைக் கேட்பது சரியல்ல. முதலிலேயே கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

சுந்தரன்—கொத்தவாலை நோக்கி, ''ஐயா இவன் சொல்வது பொய். இவனுடைய ஆட்டின் காலை நான் ஒடிக்கவில்லை. என் வேலையை நான் பார்த்துக்கொண்டிருந்தேனே ஒழிய இவனது மந்தையை நான் ஏறெடுத்தும் பார்த்ததேயில்லை''—என்றான்.

கொத்தவால்.—நீங்கள் பன்னிப் பன்னிப் பேச வேண்டாம். இனியொருபோதும் என் மனம் அவள் பால் திரும்பாது. வீணாக ஏன் தொந்தரவெடுத்துக் கொள்கிறீர்கள்—என்றான்.

இப்படி இவர்கள் ஒருவர் கருத்தை ஒருவர் தெரிந்து கொள்ளக் கூடாமல் வாது புரிவதை அவ்வழியே போன ஒருவன் கேட்டறிந்து சைகையால் அவர்களைத் தேற்றி வீட்டுக்கனுப்பினான். செவிடர் நிலைமை இவ்வளவிலிருக்கிறது.

காலப்ரமாணம்

நிமிஷம் பதினைந்து கொண்டது ஒரு காஷ்டை.

காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை.

கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம்.

முகூர்த்தம் ஒன்பது கொண்டது இரண்டு நாழிகை.

முகூர்த்தம் முப்பது கொண்டது ஒரு முழு நாள்.

நாள் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம்.

பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம்.

மாசம் ஆறு கொண்டது ஓர் அயனம்.

அயனம் இரண்டு கொண்டது ஒரு வருஷம்.

மாசம், சௌரம் சாந்திரமானம் என இரண்டுவகைப் படும்.

சூரியன் ஒரு ராசியை அநுபவிக்கும் காலம் சௌர மாசம்.

ஒரு அமாவாசை கழிந்த பிரதமை முதல் மற்றொரு அமாவாசை வரையில் உள்ள முப்பது திதிகொண்ட காலம் சாந்திர மாசம்.

சூரியன் பன்னிரண்டு ராசிகளையும் சுற்றி வருங்காலம் சௌரமான வருஷம்.

வருஷம் ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து தினங் கொண்டது.

சந்திரனுடைய சஞ்சாரத்தினால் உண்டாகிய பன்னிரண்டு அமாவாசை கொண்ட காலம் சாந்திரமான வருஷம்.

சூரியன் மேடராசியிற் பிரவேசிக்கும் தினமே சௌர வருஷப் பிறப்பு.

சூரியன் மீனராசியிற் பிரவேசித்த மாசமாகிய பங்குனி மாசத்துச் சுக்கிலபக்ஷத்துப் பிரதமையே சாந்திர வருஷப் பிறப்பு.

நான்கு வருஷத்துக் கொருதரம் சாந்திர வருஷத்திலே பதின்மூன்று அமாவாசை வரும், அதில் அதிகமாகிய ஒரு மாசத்தை அதிக மாசம் என்று வழங்குவர்.

ஆர்கால்தேசத்து இராணி

இன்றைக்குச் சற்றேறக்குறைய அறுநூற்றைம்பது வருடங்களுக்கு முன்பாக இந்தியாவில் நசீர்வுட்டீன் என்னும் ஒரு மகமதியர் அரசாண்டு வந்தார். அச்சமயம் அயோத்திக்கு அருகாமையிலிருந்த ஆர்கால் என்னும் ஒரு சிறிய நகரத்தைக் கௌதமன் என்னும் ஒரு இராஜபுத்திர அரசன் அரசாண்டு வந்தான். அவன் நசீர்வுட்டீன் கேட்டபடி கப்பங் கட்டாமையால், நசீர்வுட்டீன் கோபமடைந்து, அயோத்தியிலிருந்த தனது இராஜப்பிரதிநிதியை, ஆர்கால் தேசத்தின் மீது படையெடுக்கச் சொன்னான்.

அவ்வாறே அயோத்தி இராஜப்பிரதிநிதி ஒரு பெரும் சேனையைத் திரட்டிக்கொண்டு, ஆர்கால் தேசத்தின்மீது படையெடுத்து வந்தான். ஆர்கால் மன்னனோ அவனுக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடாமல், அவனைத் தைரியமாய் எதிர்த்துப் போரில் தோற்கடித்தான். தோல்வியடைந்த அயோத்திதேசத்து அரசனின் படைகள் புறங்காட்டி ஓடினார்கள். ஆர்கால் அரசன் தனது ஜெயபேரிகையைக் கொட்டி எல்லோருக்கும் தனது வெற்றியைத் தெரிவித்தான். குடிகளெல்லாம் அதைக்கேட்டு சந்தோஷ மடைந்தார்கள்.

அரசன் தான் அடைந்த வெற்றியைப்பற்றி மிகவும் சந்தோஷமடைந்தான். அவனுடைய முன்னோர்

கள் ஒருவரும் இது வரையில் ஒரு அரசனிடமும் தோல்வியடைந்ததில்லை. தானும் அம்மாதிரியே ஜெயமடைந்ததைப்பற்றி அவன் ஆநந்தமுற்றான். அன்று ஆர்காலில் ஒரு பெரிய விழாக்கொண்டாடப்பட்டது. அரசன் ஏழைகளுக்கு வேண்டிய அளவு தானம் செய்தான்; ஊரில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் ஒரு பெரிய விருந்தளித்தான். இராணி எல்லோரையும் அன்புடன் உபசரித்தாள். அதனால் ஜனங்களெல்லாரும் இராணியின்மீது மிகப் பிரியமாய் இருந்தார்கள்.

விழா முடிவதற்கு முன்பாக அமாவாசை வந்தது. இராணி ஒவ்வொரு அமாவாசைக்கும் கங்கா நதிக்குச் சென்று குளிப்பது வழக்கம். அன்றும் அவள் வழக்கப்படி குளிக்கத் தீர்மானித்தாள். ஆனால் அவளுக்கு இடையூறு பல இருந்தன. கங்காநதியானது அவளுடைய நாட்டு எல்லைக்கு அப்பால் இருந்தது. அவ்விடத்தில், அயோத்தி மன்னனின் சேனைகள் தங்கி இருந்தன. ஆகையால் அவள் என்ன செய்வதென்று தெரியாமல் தயங்கினாள். அரசனிடம் போய்ச் சொன்னால் அரசன் போகவேண்டாம் என்பான். கணவனின் வார்த்தையை மீறிப்போக முடியாது. என்றெண்ணி வெகுநேரம் அவள் ஆழ்ந்தயோசனையில் மூழ்கியிருந்தாள். பிறகு அவள் தனது மனதைத் தேற்றி தன்னுடன் சில தாதிகளை அழைத்துக்கொண்டு அரண்மனையில் ஒருவரும் அறியாமல் கங்கையின் கரைக்குச் சென்றாள்.

கங்கையின் கரையில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். சிலர் தண்ணீரிலிருந்து கரைக்கு வருவதும், சிலர் கரையிலிருந்து தண்ணீருக்குப் போய்க்கொண்டுமிருந்தார்கள். வேறு சிலர் கரையில் உட்கார்ந்து ஜபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு ஜபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் முழங்கால் அளவு நீரில் நின்றுகொண்டு கங்கையைப் பூஜித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியாகப் பலபேர் பலவிதமான காரியங்கள் செய்திருந்தனர். அச்சமயம் இராணியும் கங்கையை அடுத்து ஸ்நாநம் செய்தாள்.

இப்படி இராணி தனியாக வந்து ஸ்நாநம் செய்வதைக் கண்ட சிலர் ஓடிச்சென்று அயோத்தி அரசனிடம் சொன்னார்கள். அதைக் கேட்ட அயோத்தி அரசன் சந்தோஷங்கொண்டு, இராணியைக் கைப்பற்றப் புறப்பட்டான். அதற்குள் ஆர்கால் தேசத்து இராணி தனது நியமங்களை முடித்துக்கொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டாள். செல்லும் வழியில் அயோத்தி அரசனின் வீரர்கள் அவளை வந்து சூழ்ந்துகொண்டார்கள்.

அதைக்கண்டதும், இராணி சிறிதும் பயப்படாமல், அயோத்தி அரசனை நோக்கி "அடா மூடா அநாதையாய்ச் செல்லும் பெண்களின்மீது சண்டை செய்ய வந்தாயே! உனக்குச் சிறிதும் வெட்கமில்லையா! என் தேசத்து வீரர்களோடு சண்டை செய்யும்போது

அவர்களிடம் தோல்வியடைந்து, அவர்களுக்குப் புறங் காட்டி ஓடினையே. இப்பொழுது வெட்கமில்லாமல் பெண்களோடு சண்டை செய்யவந்தாயே. அடா பதரே, உன்னை ஆண்மகனென்று சொல்வதும் தவறு'' என்று கோபமாகச் சொன்னாள்.

இதைக் கேட்டதும் அயோத்தி அரசன் கோப மடைந்தான். உடனே அவன் ஆட்களைக் கூப்பிட்டு இராணியைப் பிடிக்கும்படி கட்டளையிட்டான். இதைக் கேட்டதும் இராணி "என் கணவன் கௌதமன் இது வரையில் ஒரு எதிரிக்காவது வணங்கவில்லை. நானும் அப்படியே செய்வேன். ஐயோ! இராஜபுத்திர இராணி யைக் காப்பாற்ற இங்கு ஒரு இராஜபுத்திரனும் இல் லையா? இருப்பானேயானால் அவன் உடனே முன்வந்து என்னை இக்கஷ்டத்தினின்றும் காப்பாற்றட்டும் ஆ! ஈசா! என்செய்வேன் நான்'' என்று கதறினாள்.

அவள் இவ்வார்த்தைகளைச் சொல்லி முடிப்ப தற்கு முன்பாக அவர்களைச் சூழ்ந்து நின்றுகொண் டிருந்த கூட்டத்திலிருந்து அப்பாய்ச்சண்ட் என்னும் வீரன் சில ஆட்களுடன் முன்வந்து இராணியைச் சூழ்ந்து நின்று அயோத்தி அரசனின் வீரர்களை எதிர்த்தான். அவர்களுள் ஒருவன் ஆர்கால் சென்று அரசனிடம் நடந்ததைச் சொல்ல அதி விரை வாகச் சென்றான். இருதிறத்தாருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இராணியின் உதவிக்கு வந்த வீரர்களில் அநேகர் மாண்டார்கள். கடைசியாய் அப்பாய் சண்டும்

அவனோடு இன்னும் இரண்டு மூன்று வீரர்களுமாத் திரமே உயிருடன் இருந்தார்கள். ஆர்காலிலிருந்து உதவி இன்னும் வரவில்லை. கடைசியாக தோற்றுப் போவார்களென்றே எல்லோரும் எண்ணியிருந்தார்கள். அச்சமயம் தூரத்திலிருந்து ஒரு சத்தம் கேட்டது. அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். தூரத்தில் ஆர்கால் மன்னனின் சேனைகள் வருவதைக் கண்டார்கள். உடனே அயோத்தி மன்னனும் அவன் சேனையும் பயந்து ஓடிப்போயினர்.

ஆர்கால் மன்னன், அப்பாய்ச்சண்டைத் தழுவிக் கொண்டான். அவனுடைய வீரத்தன்மைக்கு மெச்சி அவனுக்கு ராவ் என்னும் பட்டம் அளித்தான்; பிறகு அவன் தனது மகளை அவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்து, அவனுக்குத் தனது இராஜ்யத்தில் ஒரு பாகம் கொடுத்தான்.

நல்லவர் இணக்கம் போல நன்மையைக் கொடுப்ப தில்லை
அல்லவர் இணக்கம் போல அல்லலைக் கொடுப்ப தில்லை
வல்லவர் இணக்கம் போல வாழ்வினை அளிப்ப தில்லை
இல்லவள் இணக்கம் போல இன்பமொன் றில்லையில்லை.

எந்த ஜாதியிலும் எந்த நாட்டிலும் எந்த லோகத்திலும் தேவர்களும் அசுரர்களும் இருக்கிறார்கள். நல்லவர்கள் தேவர் கள் தீயவர்கள் அசுரர்கள்.

ஆயுணாசகர்கள்

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எல்லாம் வல்ல இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட மானிடராகிய நம்மனைவருக்கும் அருங்குணமாகிய பகுத்தறியும் சக்தியிருந்தும் அதைச் சிறிதேனுமுணராமல்:—மாபாதகங்களாகிய காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், கொலைபுரிதல் முதலியவைகளில் நமது அருமையான சரீரத்தையும், மனத்தையும் அநாவசியமாய்ப் புகுத்திவருகின்றோம். ஈதல் மறுத்தலை இன்பமாய்க் கொள்கிறோம். நமது சரீர சௌக்கியத்திற்கு விரோதிகளாய் இருக்கப்பட்ட வஸ்துக்களை விலைக்கு வாங்கி உபயோகித்து வருகின்றோம். இஃது:—குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதைக்கொப்பாயிருக்கிறது.

எனவே மானிடர்களுக்குச் சுகவிரோதிகளாயிருப்பவை எவை என்பதை ஈண்டாராய்வோம்:—

புகையிலை.

முதன் முதலாகப் புகையிலையை எடுத்துக்கொள்வோம். இதைப் பலர்:—பொடி, பீடி, சுருட்டு, சிகரேட், ரோக்குடாக், முதலிய நாமங்களோடு புகை பிடிக்கின்றனர்! அப்புகையை உறுஞ்சி உள்ளிழுத்ததும் பேரானந்த மடைந்தவர்கள்போல் காணப்படுகின்

றனர்! அப்புகையைச் சிலர்:—சிற்றுண்டிபோல் விழுங்கி அதன்பின் மூக்காலும், வாயாலும் சிறிது புகையை வெளியில் விடுகின்றனர்! சிலர் அப்புகையை யப்படியே வெளியில் விடுகின்றனர்! (இவர்கள்:—புதிய பழக்கக்காரர்களென அதன் அப்பியாசிகள் கூறுகின்றனர்!) சிலர்:—பொடியாகத் தேய்த்து நாசியிலும், சிலர்:—பல்லீறுகளிலும் அதைச் செலுத்தி ஆனந்தமடைகின்றனர்! சிலர்:—அப்புகையிலையைக் கத்தரித்துத் தூள் பண்ணிப் பலவித வாசனைச் சரக்குகளையும் சேர்த்து பக்குவப்படுத்தி அதைத் தாம்பூலத்துடன் வாயிலடைக்கிக்கொண்டு சந்துஷ்டி யடைகின்றனர்!

ஐயோ! இவ்வாறு உட்செல்லும் புகையிலையின் சத்து விஷத்தன்மை யுள்ளதென்பதையேனும், அஃது அங்கு சென்று செய்யும் நாசவேலை இன்னதென்பதையேனும் இவர்கள் கனவிலும் கருதுவதில்லை. அந்தோ! அவ்விஷச் சத்து:—உள்ளிருக்கும் ஈரல், சுவாசாசயக் கருவிகள், குடல் மூளை முதலியவைகளைச் சுருங்கப் பண்ணி, அதன் சக்திகளைக் குறைத்து, அவைகள் செய்யும் வேலைகளைச் சரிவரச் செய்யவொட்டாது தடுத்து விடுகிறது! அன்றியும் சில மெல்லிய கருவிகளைச் சாப்பிட்டேவிடுகிறது! இவ்விதமாக அவயவங்கள் தளர்வுற்றதும் தேகத்தை நாளுக்கு நாள் ஈனஸ்திதிக்குக் கொணர்ந்துவிடுகிறது! ஆயுளைக் குறைத்து விடுகிறது! நாவு, நெஞ்சுகளை யுலர்த்தி நாதத்தைக் கெடுத்து விடுகிறது.

என்னே! காலத்தின் நீதி? இப்புகையிலைப்பழக்கமுள்ளோர்:—சாப்பாட்டுக் கில்லையாயினும் சும்மாவிருந்துவிடுவர். புகையிலை இல்லையாயின் ஒருவிதப் பைத்தியம்போல் காணும் காட்சி பார்ப்பவருக்கே விளங்கும். இவர்கட்குப் புகை, பொடி, மணப்புகையிலையின் பசியே பெரிதாகத் தோணும். இவர்கட்குத் தேவையுள்ள இந்தச் சரக்கு ஒரு சமயம் தங்கள் வசமில்லாமலும், வாங்குவதற்குப் பையில்லாமலும் அதே கவலையோடு தங்கள் புத்திக்கு ஒன்றும் படாது தியங்கிக்கொண்டிருக்கும்போது எவரேனும் புகைப்பிடித்தவராகவோ, பொடிப்போட்டவராகவோ வருவது இவருடைய கண்ணுக்குத் தென்படுமாயின் பெரிய உத்ஸாகத்தோடு கிட்டத்தில் நெருங்கி:—ஸார்! ஸார்!! ஒரு பீடி கொடுங்கள் என்பர். வந்தவர்:—கையிலிருப்பதைத் தவிர வேறுகிடையாது, வாங்கவும் பைஸாவில்லை. நான் சாப்பிட்டு வரும் வழியில் என் சிநேகிதனிடம் ஒரு பீடி வாங்கிப் பற்றவைத்தேன்" என்பர். அவர் "போகட்டும் கையிலிருப்பதைத் தாருங்கள் ஓர் 'தம்' அடித்துக்கொண்டு தருகிறேன்!" என்பர். இந்நிலைமையில் அவர் கொடுத்துவிடுவாராயின் இவருடைய புகைப் பைத்யம் சற்றுத் தணிந்து கொடுத்தவர்மீது சந்தோஷமும் ஏற்படும். அவர் இல்லையென்பாராயின் இவருடைய புகைப்பேய் நன்றாய்ப் பற்றிக்கொள்ளும். இல்லையென்றவர்மீது கோபமும் வந்துவிடும். புகைபிடித்தவராக வருபவர்:—குஷ்டரோகியாயினும் சரி, க்ஷய

ரோகியாயினும் சரி, இன்னும் பார்ப்பதற்கு மிக்க அவலக்ஷணமாகவும், கண்ணுக்குத் தெரியாத வேறு நோயுள்ளவராக விருந்தாலும் சரிதான். அதைப்பற்றி நின்றவருக்குக் கவலையொன்றுமில்லை. தன்னுடைய அவாவைத் தீர்த்துக்கொள்வதற்கு அவருடைய எச்சிற்பீடியை வாங்கிச் சாப்பிட்டுவிட வேண்டியதே! என்னே! இவரின் புத்தியின் கேடு?

முதன் முதலாக வெள்ளையர்கள் நம்மிந்தியாவிற்குட் பிரவேசித்தபோது:—அவர்களே சுருட்டு, சிகரேட் குடித்ததாயும் (அன்னோரின் நாடாகிய ஐரோப்பா முதலிய தேசங்களின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப புகைபோக்கவேண்டிய தவசியமாயிருந்ததென்று சாஸ்திரோக்தமமாயில்லாது ஒரு சாமான்ய காரணம் சொல்லுகின்றனர்) அதைக்கண்ட நம்மவர்:—ஐயையோ! அநியாயம்!! அநியாயம்!!! வெள்ளையரின் வாயில் தீ பற்றிக்கொண்டு எரிகிறதே யெனக் கவலைப்பட்டார்களென்று சிலருரைக்கக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே நம்மவர்:—வெள்ளையரின் சகவாசமேற்படுமுன், பீடி, சுருட்டு, சிகரேட் என்னும் பெயரையுங்கூட காதாற் கேட்டிராரென்றே கருதுகிறேன். எம் மத சாஸ்திரத்திலாயினும் இதற்கிட மளித்திருக்கின்றனவா? அதுவுமன்று.

இக்காலத்தில் இரண்டு மூன்று வயது குழைந்தைகளுங்கூடத் தன் தகப்பன், சகோதரர், உபயோகிக்கும் பீடி சிகரேட் முதலிய புகைபிடிப்பதைப் பார்த்

துத் தனக்கும் வேண்டுமென்று கேட்கின்றன! அப்ப
யானால் ஐந்து வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களும், ப
னைந்து வயதிற்கு மேற்பட்ட வாலிபர் முதல் விருத்
ரீராகப் பிடிக்கும் புகையின் மிகையைப்பற்றி எழுது
தென்றால் இப்பத்திரிகையிலும், மற்றும் எப்பத்திரி
யிலும் இடம் போதாது! எனவே, "தகப்பன் எ
வழியோ, பிள்ளை அவ்வழியே" என்ற பழமொழிப்ப
பெற்றோர்கள் புகை பிடிப்பதுகொண்டு மக்களும் அதி
பழகிவிட்டனர்; விடுகின்றனர். பெரியவர் உபயோகி
பதைப் பக்கத்திலிருந்து பார்த்த சிறியவர் எங்கிருந்தே
தாமும் பீடி சம்பாதித்து உபயோகிக்கின்றனர்!

சகோதரர்களே! இப்புகையிலையினால் ஏற்படு
கேடுகளையும், அதன் துர்க்குணங்களையும் யானும் சி
வருஷங்களுக்கு முன் பாவித்தறிந்தவனே. எனவே
இப்பழக்கம் செய்துகொள்வது வீணே கண்ணைமூடி
கொண்டு வேண்டுமென்று கிணற்றில் விழுந்தத
கொப்பாகும்! இதன் குணத்தைக் கண்டறிந்தும் இ
காலத்தில் நமது சகோதரரிலனேகர் உபயோகப்படுத்
கின்றனரே நாமாத்திரம் விடலாமா வென்றெண்ணுவ
அந்தோ! தற்கொலை செய்துகொள்வது போலாகும்.

எனவே இத்துர்விஷயத்தினின்றும் மனிதர்களை
விலக்குவதெப்படி? ஆங்காங்குள்ள பெரியோர் மு
லாவதாக தங்களைத் திருத்திக்கொண்டு சிறியோரையு
அதைச்செய்யாது விலக்கவேண்டும். அவ்விதமின்றி
குடிப்பழக்கத்தையுடைய ஓர் பெரியார் அதைச் செ

யாதொழியும்படி சிறியோரைக் கண்டித்தால் அச்சிறியார் புத்தியுள்ளவராயின் "ஏனையா பெரியவரே! நீர் மாத்திரம் அப்பழக்கத்தை வைத்துக்கொள்ளலாம். நாங்கள் மாத்திரம் கூடாதோ" என்பர். இவ்விஷயத்தை வரையுமுன் கீழேகண்ட இது சம்பந்தமான ஓர் கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதையுணர்ந்து பின் மேலேக்குவோம் :—

நமது இந்திய தேசத்தினோர் பகுதியாகிய "வைகை"க் கரையை யடுத்த மதுரையில் சிலகாலத்திற்கு முன்னர்:—சிதம்பரதீக்ஷித ரென்றொருவரிருந்தார். அவருக்கு ஏராளமான ஆஸ்தி யுண்டு. அவரின் விருத்தாப்பிய திசையில் அவரின் குமாரராகிய இராமயோகி தீக்ஷிதர் தமது பிதாவை மிகக் கேவலமாக நடத்த ஆரம்பித்தார். சுருங்கச் சொல்லின் வீட்டில் வளர்க்கும் நாயைப்போல நடத்தத் துணிந்தார்! எப்படி? அவருக்கு ஒரு சட்டியைக்கொடுத்தார். சின்னவா:—பன்னீரால் குளித்துப் பலவித நல்ல பதார்த்தங்களோடு அன்னமருந்தி, அதன் பின் சிறிது கூழ் கொணர்ந்து கிழவரின் பாண்டத்தில் வார்த்து அருந்தும்படி செய்வார்! இவ்விதமாகத் தினந்தோறும் நடந்துவரும் நாளிலோர் நாள் சின்னவரின் குமாரனை ஐந்துவயதுள்ள அவனந்தியென்பவன் தனது தாத்தாவாகிய கிழவரின் பாண்டத்தை எடுத்து ஒளித்துவைத்து விட்டான். அன்று சின்னவர் வழக்கம்போல் தனது சாப்பாட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு கூழ் கொணர்ந்து

பாத்திரத்தை எடுக்கும்படி கிழவருக்குச் சொன்னார். என் செய்வார் பாவம்! பாத்திரத்தைத் தேடினார் அகப்படவில்லை! பரிதபிக்கிறார்! அதைக் கண்ட இராமயோகி கோபயோகியாகி "தடி மாடே பாண்டத்தை எங்கே வைத்தாய்?" என்று அவரின் தலையிலோங்கி ஓர் குட்டுக் குட்டினார்! கிழவர் வலிபொறுக்கமாட்டாமல் சிறு பிள்ளையைப்போல் தேம்பித் தேம்பி யழுதார்!

இதைப் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பேரப்பிள்ளையாகிய அவனந்தி தனது மனதுள்,— "ஓஹோ! நமது அப்பாவும் கிழவனாயிருக்கும்பொழுது யான் கொடுக்கும் மண்பாண்டத்தைத் தவறி விட்டுவிட்டால் அப்பொழுது தடிமாடே, என்று திட்டித் தலையிற் குட்டவேண்டும் போலும்" என்று பாடம் செய்து கொண்டு தன் தகப்பனைப் பார்த்து "அப்பா! தாத்தாவை யேனடிக்கிறீர்?" அடிக்காதேயுங்கள். இதோ இருக்கிறது அந்தப் பாண்டம் என்று அதைத் தந்தையிடம் கொடுத்து "அப்பா! இப்பாண்டம் தாங்கள் பெரியவராயிருக்கும்போழ்து உதவுமே யெனப் பத்திரப்படுத்தி வைத்தேன்" என்றானாம். அவ்வளவையும் கேட்ட ராமயோகி தீக்ஷிதரின் மனமானது அந்நிமிஷமே மாறுதலடைந்தது அவர் தாம் செய்த தப்பிதத்தை யுணர்ந்து தம் பிதாவாகிய சிதம்பரதீக்ஷிதரை மிகவும் மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்திவந்ததோடு அவருக்குத் தினந்தோறும் அறுசுவை யுண்டியளித்து அவர் காலாலிட்டதைக் கையால் செய்து வந்தாராம்.

எனவே அவரின் பின்குணமே அவர் குமாரனாகிய அவனந்திக்குப் படிந்ததாம்.

சகோதர சகோதரிகளே! பெற்றார் வழியே பிள்ளைகள் நடக்குமென்பதற்கு ஆக்ஷேபனையுமுண்டோ? புகையிலை நஞ்சருந்தும் பெரியோர்:—முதன் முதலாகத் தாங்களருந்துவதை யொழித்து, மற்றவர்களருந்துவதையு மொழிக்கத் தலைப்படுவாராயின் அந்தட்சணமே அத்துர் வழக்கங்கள் நம்மை விட்டொழிந்துபோம்.

இது காயற்பட்டணம் போர்டு முஹம்மதியப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயர், முத்துஸ்வாமிப் பண்ணையார் ஒரு மகம்மதிய பத்திரிகைக்கு எழுதியது.

எவர் பெரியவர்?
ஞானசூரியரே பெரியவர்.
எவர் சிறியவர்?
ஞானசூனியரே சிறியவர்.
எவர் வாழ்ந்தவர்?
பரமனைப்பாடிய பக்தரே வாழ்ந்தவர்.
எவர் தாழ்ந்தவர்?
பொய்யைப் போற்றிய பொய்யரே தாழ்ந்தவர்.
எது நல்ல நாள்?
பெரியவருடைய தரிசனங்கண்ட நாளே நல்ல நாள்.
எது பிறந்த நாள்?
சிவனைப் போற்றிய நாளே பிறந்த நாள்.
எவன் சிஷ்யன்?
குருவின் உபதேசப்படி நிற்பவனே சிஷ்யன்.
எவள் பதிவிரதை?
கணவன் சொற்படி நடப்பவளே பதிவிரதை.

A.S.B.

பெண்களின் சம்பாஷணை

நெல்கொண்டாவில்.—சுப்பண்ணா என்னும் ஒரு பிராமணன் வீடு.

காலம்.—காலை.

பாகீரதி.—(சுப்பண்ணாவின் ஸம்ஸாரம்) மீனாட்சீ என்ன அவசரம்?

மீனாட்சி.—அடுப்பிலே உலைநீர் வச்சுவிட்டு வந்தேன்.

பாகீரதி.—என் இவ்வளவு நாழி அடுப்பு மூட்ட? ஓ ஆத்துக்காரர் ஊரிலில்லையோ — இருந்தால் தானென்ன? — பரமசாது—உன் குணத்துக்கேற்ற தங்கம். நீ அதிர்ஷ்டசாலி

மீனாட்சி.—ஐயோ, என் அதிர்ஷ்டத்தை நீ தான் மெச்சிக்கணும்—அதிர்ஷ்டத்துக்கென்ன ஆறுப் பெருகுகிறது.

பாகீரதி.—என்—அதிர்ஷ்டத்துக் கென்ன குறைவு? ஆத்துக்காரர் சமத்து — அவிவேகியினுடைய உறவைக்காட்டிலும் — விவேகியினுடைய பகை நல்லது. இல்லையா? குழந்தையில்லை—இந்த குறை யொன்று போதாதா என்று சொல்வாய்!

மீனாட்சி.—அது பெரிய குறையில்லையா? பிள்ளை யில்லாத பாக்யம் பெற்றிருந்தென்ன சிலாக்யம்: பிள்ளையில்லாத சோறு புழு. பிள்ளைச்சீர்கொள்

ளாக் கிடைக்குமா? பிச்சையிட்டுக் கெட்டவர்களுமில்லை பிள்ளை பெற்றுக் கெட்டவர்களுமில்லை—இப்படியெல்லாம் சொல்லுகிறார்களே தெரியாதா உனக்கு?

பாகீரதி.—யார் என்ன சொன்னாலும் அது ஒரு குறையாகாது. பிள்ளை, வயிற்றிலே வந்துவிட்டால் படுங்கஷ்டமும் அதைப் பத்து மாதம் சுமக்கும்போது படுங் கஷ்டமும் அப்பால் அதைப் பெறுங் கஷ்டமும் அதை வளர்க்குங் கஷ்டமும் அதுக்கு வியாதி வந்து விட்டால் மனஸுக்கு உண்டாகும் சங்கடமும் அது வியாதியினால் செத்துவைத்தால் உண்டாகும் துக்கமும் கொஞ்சமா? — ஐயோ! — ஐயோ! — போதுமடியம்மா குழந்தை! போதுமடியம்மா பெத்த சுகம். நான் அவல ஆம்படையானையும் ஒரு சிசுவையும் வச்சிண்டு படும்பாடு யாருக்குத்தெரியும்—ராத்திரிபகலாய்த் தூக்கமேது! நல்ல சோறேது?—'பெண்ணைக் கொண்டு பையன் பேயானான், பிள்ளையைப் பெற்று சிறுக்கி நாயானாள்' என்பது சரியாக இருக்கிறது.

மீனாட்சி.—நீ சொல்வது ஒரு விதத்தில் சரியானாலும் ஆம்படையான் அநுகூலமாயும் புத்திசாலியாயுமிருந்தால் எந்தக் கஷ்டமிருந்தாலும் தெரியாது —அந்த பாக்கியம் இல்லாதவளுக்கு எந்த பாக்கியமும் பிரயோஜனப்படாது.

பாகீரதி.—மீனாட்சி——அதை ஆயிரந்தடவை சொல்லு.—ஆம்புடையான், கோப்பில்லாக் கூத்தும் குருவில்லா ஞானமும்போல் இருப்பானானால், என்ன செய்யமுடியும்? கொண்டவன் பலமிருந்தால் குப்பைமேடேறிச் சண்டை போடலாம்—என்பது போல், நாம் எந்தக் கஷ்டமும் பொறுத்துக்கொள்ளலாம்—என்ன செய்வேன்——அந்த பாக்கியமில்லையே—

மீனாட்சி.——சரி—உன் ஆத்துக்காரர் எங்கே?

பாகீரதி.—ஸ்நாநத்துக்குப் போயிருக்கு —— வந்துவிட்டால் நாயாய் விழும்—பேயாயாட்டும்—வயிற்றில் சோறு விழுந்துவிட்டால், பிணமாய்க்கிடக்கும். அப்பால் எழுந்து ஊர் வம்பு பேசும்—ஊர் வம்பு அகப்படாவிட்டால்——என் வாயைக்கிண்டி வாசவில் வைக்கும்——என்ன செய்யலாம்——தாலியுறவு—சீலை உறவா——தாலியுறவு தலையோடுதான்—

மீனாட்சி.——என்ன செய்யலாம்—பெண்ஜன்மத்துக்கு இந்தப்பாடுதான்—பெண்ணாய்ப் பிறப்பதைவிடப் பேயாய்ப் பிறக்கலாம்—என்று சொல்வதில்லையா? இருக்கட்டும் — நம்மைவிடக் கஷ்டநிலைமையிலிருக்கிறார்களே—அவர்களைப் பார்த்துத் தேறுதலடைய வேண்டியதுதான்—நான் போகிறேன்—நாழியாச்சு—மத்தியானம் மேட்டுத் தெரு ஸ்ரீமான் சாம்பமூர்த்திபந்துலு வீட்டிலே ராமாயண

கதை நடக்கிறதாம். நான் போகலாமென்றிருக்கிறேன்—நீ வருவாயென்று பார்த்தேன்.

பாகீரதி.—நான் கெட்ட கேட்டுக்கு ராமாயணங் கேட்பதுதான் குறை. நாய் கெட்ட கேட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை ஒரு சந்தியாம். இவாளுக்கு வயசாச்சே குட்டிச் சுவருக்காவதுபோல் அது தான் — ஒரு கதையா — புராணம — ஜபமா பூஜையா——ஒண்ணு கிடையாது. காலையில் ஸ்நானஞ் செய்வது தப்புவதில்லை—அதுகூட இல்லாமலிருந்தால் இந்த ஜன்மம் வேண்டாம். தகப்பனார் தேடிய சொத்து கொஞ்சம் இருக்கு. அது தீர்ந்துபோனால்—அப்புறம் தெரியும்.

மீனாட்சி.——ஆனால் நீ வல்லேன்னு சொல்லு——

பாகீரதி.—வரமுடியாது —— எப்படியாவது வரப்பார்க்கிறேன்.

மீனாட்சி.—நான் போகிறேன். (போகிறாள்)

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்.

குருவின் பெருமை

"தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும்—எந்தமுயர்
தானாகு வானும் சரணாகு வானும் அருட்
கோனாகு வானும் குரு."

கோதாட்டொழி

(549-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற மாதம் லண்டனில் நடந்த கதையொன்று சொன்னோம். இந்த மாதம், நம் தேசத்திலே மேற்குக் கடற்கரை ஓரத்திலே—லண்டனில் இருந்து நம் தேசத்துக்கு வரும் பெரும்பாலோர் கப்பலைவிட்டு இறங்கும் துறைமுகமாகிய பம்பாய் பட்டிணத்துக் கதை கூறப் போகிறோம். இதுவும் சென்ற அக்டோபர் மாதம் 22-ம் தேதியில் நடந்தது. பம்பாயில் 'லோயர் பாரல் துளசிபைப் ரோட்டு' என்று ஒரு சாலை இருக்கிறது. அதன் அருகில் குளமொன்று இருக்கிறதாம். அதில் குளிப்பதற்காக பாங்கியா, இராமச்சந்திரன், மகாதேவன், மகதபாபாஜி ஆகிய நால்வரும் சென்றனர். பாங்கியாவுக்கு 9-வது வயது; இராமச்சந்திரனுக்கு 6-வயது. மகாதேவனுக்கு 5-வயது; மகதபாபாஜிக்கு 4-வயது.

இவர்கள் குளத்திற்குப் போனதும், பாங்கியாவும் இராமச்சந்திரனும் குளத்தில் இறங்கினர். தண்ணீரில் பத்து அடி தூரம் சென்றனர். மகாதேவனும் மகதபாபாஜியும் கரையில் இருந்தனர். பாங்கியாவும் இராமச்சந்திரனும் சென்ற இடம் நான்கு அடி ஆழம் இருக்கிறதாம். தரை சேறாகவும் இருந்ததாம். அந்தச் சேறோ அநேக நாட்களாய் எடுக்கப்படாமல் அழுகினதாய், மிக

-வும் மெதுவானதாய் இருந்தது. ஆகையால், பாங்கியாவும இராமச்சந்திரனும் அந்த இடத்திற்குச் சென்றதும், அந்தச் சேற்றில் அழுக்கினார்கள்; ஜலம் தலைக்கு மேல் எறிற்று. தண்ணீரில் மூழ்கினர் கால்களை எடுத்து வைக்க பிடுங்க முடியாமல் திக்குமுக்காடினர்.

கரையில் இருந்த மகாதேவனும் மகதபாபாஜியும், தண்ணீரில் இறங்கின, பாங்கியாவையும் இராமச்சந்திரனையும் காணாமல் திகைத்தார்கள்; அழுதார்கள்; அலறினார்கள். அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் இன்னதென்று அறிந்தார்கள். குளத்தில் இறங்கித் தேடினார்கள். இருவரும் அகப்பட்டனர். இருவரையும் கரைக்குக் கொண்டு வந்தனர். இருவரும் இறந்துபோயிருந்தனர்.

இது சங்கதி பெற்றோருக்குத் தெரிந்தது. அவர்கள் அடித்து மோதிக்கொண்டு அழுதார்கள். என்ன பிரயோஜனம்? இறந்தவர்கள் பிழைத்துவரமுடியுமா? சிலநாள் சாப்பிடாமலும் விசனப்பட்டார்கள். பெற்றோருக்கு ஏற்பட்ட இத்தனை கஷ்டமும், துஷ்டத்தனமுள்ள—பெற்றோர்—பெரியோர் சொல்—புத்தி கேளாத பிள்ளைகளால் வந்தது தானே. 9-வயது பையனும் 6-வயது பையனும் நான்கு அடி ஆழத்தில் இறங்கலாமா? இவர்கள் நான்கடி உயரம் இருப்பார்களா? இவர்கள் குளிப்பதற்காகக் குளத்திற்குப் போனதே பிசகு. சிறுவர்கள் குளிக்கவேண்டுமானால், வீட்டில் குளிக்கவேண்டும். இல்லாவிட்டால் பெற்றோர் முதலிய மற்றோர் எவருடனாவது குளத்திற்கோ வாய்க்

கால்களுக்கோ குளிக்கப்போகவேண்டுமே ஒழியத் தனியாய்ப் போகவே கூடாது. போனால் பாங்கியாவுக்கும் இராமச்சந்திரனுக்கும் ஏற்பட்ட கதிதான் நேரும்.

சிறுவர்கள் குளிப்பது என்பதெல்லாம் விளையாட்டே ஒழிய உண்மையில் குளிப்பதென்பதல்ல. சிலர் தவிர—ஏன், இரண்டொருவர் தவிர, எந்தச் சிறுவராவது உடம்பைத் தேய்த்துக் கழுவுகிறார்களா? குதிப்பதும், விளையாடுவதும், ஓடுவதும், தாண்டுவதும், ஒருவனை ஒருவன் பிடிப்பதும் தான்காணலாம். இதெல்லாம் குளிப்பதாகுமா? குறும்புத்தனமேயாகும். குளிப்பதென்றால் உடம்பைத் தேய்த்துக் கழுவவேண்டும். துணிகளைத் தோய்த்து அலசிப் பிழிந்துகொண்டு கரையேறவேண்டும். வீட்டுக்குப் போகவேண்டும். இதுதான் குளிப்பதற்கு அழகு—அடையாளம் ஆகும்.

ஒவ்வொரு சமயங்களில், இருந்தாற்போல் இருந்து விளையாட்டு வினையாகவே முடியும். பாங்கியாவும் இராமச்சந்திரனும் குளிக்கப்போனது தண்ணீரில் விளையாடவே ஒழிய, உண்மையில் குளிப்பதற்காகவல்ல. விளையாடவேண்டுமானால் தரையில் விளையாடவேண்டும். அதுவும் சண்டை சச்சரவு இல்லாமல் விளையாடவேண்டும். நீந்தக் கற்றுக்கொண்டால் ஆபத்தில் உதவும் என்று சொல்லுவீர்கள்! நீந்தக் கற்றுக்கெள்ளவேண்டுமானால், கற்றுக்கொள்ளுகிறவர்களுடன் இன்னும் சில—இரண்டொரு பெரியவர்களேனும் இருக்கவேண்டும். அப்போதுதான், கற்றுக்கொள்வோர்களுக்குக் கைகால்கள் அயர்வு ஏற்பட்டுக் களைத்துப்போனால் ஆபத்து—கெடுதி ஏற்படாமல் உதவி செய்யக்கூடும். இல்லாவிட்டால் அந்த இருவருக்கும் ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் ஏற்படக்கூடும். இதைப்பற்றித்தான்,

" நீர் விளையாடேல் "

என்று, ஔவைப் பாட்டியும் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஆகையால், நீங்கள் அதன்படியும், மேலே சொன்னவைகளின்படியும் ஜாக்கிரதையாய்ப் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளவேண்டும். நீங்கள் நல்ல பிள்ளைகள், குறும்புத்தனம் செய்யாதவர்கள், பெரியோர்கள் சொற்கேட்டு அதன்படி நடப்பவர்கள் என்று நல்ல பெயர் எடுக்கவேண்டும். அப்படியானால்தான், கடவுளும் மற்றவர்களும் உங்களுக்கு உதவிசெய்வார்கள். நீங்கள் கஷ்டப்படாமல் சுகமாய் வாழ்வீர்கள். எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நல்ல புத்திகளை அருள் செய்வாராக.

அடுத்த மாதம் உங்களுக்கு இன்னொரு புதிய கதை சொல்லப்போகிறேன். கடவுள் கருணை செய்க.

P. பரிமணப்பல்லவராயர்—ஆசிரியர்

"ஔவை சொல் ஆய்ந்து கொள்."

A.S.B.

அரசன் துறவியானது

வெகு காலங்களுக்கு முன்பாக பால்க் என்னும் தேசத்தில் இப்பிராஹீம் பென் ஆடம் என்னும் ஒரு மகம்மதியர் அரசாண்டு வந்தார். அரசவம்சத்தில் பிறந்து, எப்பொழுதும் சுகமே அனுபவித்து வந்ததால் இப்பிராஹிமுக்கு வருத்தம் என்பதே சிறிதும் தெரியாமல் இருந்தது. அவர் வேட்டையாடுவதிலும், அரண்மனை மசளிருடைய ஆடல் பாடல்களைக் கேட்டு மகிழ்வதிலும் தமது காலத்தைக் கழித்து வந்தார். இப்படியாக அவர் அரசாங்கவிஷயங்களைக் கவனியாமலே இருந்ததால் அவருடைய நாடு நாளுக்கு நாள் க்ஷீணதிசையை யடைந்து வந்தது.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் இப்பிராஹீம் தமது அறையில் படுத்துத் துயில்கையில், யாரோ ஒருவன் கூரையின்மேல் நடக்கிற சப்தத்தைக் கேட்டான். உடனே அவன் எழுந்து "யார் அது, கூரையின்மேல் நடப்பது" என்று கேட்டான்.

அதற்கு "ஐயா நான் காணமற்போன என்னுடைய ஒட்டகத்தைத் தேடுகிறேன்" என்று ஒரு சப்தம் விடையாகக் கிடைத்தது.

அதைக் கேட்ட இப்பிராஹீம் நகைத்து "அடா மூடா, காணமற்போன ஒட்டகத்தை வீட்டின் கூரை மேலா தேடுவது?" என்று பதில் உரைத்தான்.

அதற்கு "அடா மூடா, நீ அரசனாக அரண்மனையில் சுகத்தை அனுபவித்துக்கொண்டு, கடவுளைத்தேடுவது இப்பொழுது நான் என் ஒட்டகத்தைக் கூரை மேல் தேடுவதுபோல் இருக்கிறது" என்று பதில் கிடைத்தது. அதைக் கேட்டதும் அரசன் திடுக்கிட்டான். பிறகு ஆழ்ந்த யோசனையில் மூழ்கினர்.

மறுநாட் காலையில் அவர் தமது சிங்காசனத்தில் தமது மந்திரி முதலானோர் சூழ வீற்றிருக்கும்போது, அவர் கண்ணுக்கு ஓர் ஏழை தன்முன் வருவதுபோல் தோன்றிற்று. அரசன் அவனை நோக்கி "யார் அது?" என்று கேட்டான்.

அதற்கு அந்த ஏழை, "ஐயா நான் இந்தச் சத்திரத்தில் தங்கலாமா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட அரசன் கோபங்கொண்டு "இதைப் பார்த்தால் உனக்குச் சத்திரம்போல் தெரிகிறதோ, செல் உடனே இவ்வரண்மனையை விட்டு" என்றான்.

அதற்கு அவன் "ஐயா அவ்வளவு கோபப்பட வேண்டாம். சற்று நிதானித்து நான் சொல்வதைக் கேளும். உங்களுக்குமுன் இங்கே யார் இருந்தது?" என்று கேட்டான்.

"என் தகப்பன்" என்று அரசன் பதில் உரைத்தான்.

"உன் தந்தைக்கு முன்பாக இங்கு இருந்தது யார்?" என்று அவன் கேட்டான்.

"என் தந்தையின் தந்தை" என்று பதில் சொன்னான்.

"இப்பொழுது அவர்களெல்லாரும் எங்கே?" என்றான்.

"அவர்களெல்லாரும் மரித்துப் போயினார்" என்று விடையளித்தான்.

"இப்படி ஒருவன் சிலவருடங்கள் தங்கிப்போவதும், அதற்குப் பிறகு மற்றொருவர் வந்து தங்குவதுமான இந்த இடம் ஒரு சத்திரம் அல்லவா?" என்று சொல்லிப் போகப்புறப்பட்டான்.

உடனே அரசன் தனது சிங்காசனத்தை விட்டு இறங்கி அவர் பின் சென்று "ஐயா பெரியவரே, தாங்கள் யார்? எனக்கு அதைக் கூறிப்போகவேண்டும்" என்று கேட்டான். அதற்கு அவர் "நான் இந்நாட்டு கஸீர்" என்று பதிற்சொல்லி அங்கிருந்து மறைந்து போயினார். அரசன் அவ்வாறு பேசுவதையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த அமைச்சரும், மற்றுமுள்ளவர்களும், அரசன், தேக அசௌக்கியத்தால் பிதற்றுகிறார் எனவெண்ணி அவரை மெல்ல அழைத்துச் சென்று அவருடைய படுக்கையறைக்குள் விட்டார்கள். அன்னாள் முதல் அரசன் மனம் மாறிற்று.

பின் ஒரு நாள் அவன் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருக்கும்போது, "கடவுள் உன்னை வேட்டை

யாடுவற்காகப் பிறப்பித்திலர்" என்று ஒரு சப்தம் அவன் காதில் பட்டது. அவன் திரும்பிப் பார்த்து ஒருவரும் காணாமையால், அவன் அதை யொன்றும் கவனியாமல் திரும்பவும் வேட்டையாடப் புறப்பட்டான். அச்சப்தம் திரும்பத் திரும்ப அவன் காதில் படவே அவன் மனதில் "இவ்வாறு கூறுபவர் கடவுளாய்த்தான் இருக்கவேண்டும், நாம் அவருக்கு வணங்கி நடக்கவேண்டும்" என்ற எண்ணம் உண்டாயிற்று.

உடனே அவன் குதிரையை விட்டிறங்கித் தனது விலையுயர்ந்த ஆடையை ஒரு இடையனுக்குக் கொடுத்துவிட்டு, அவனுடைய ஆடையைத் தான் வாங்கி அணிந்து கொண்டு எல்லாவற்றையும் துறந்து ஸந்நியாசியாயினான். அவன் காட்டில் வெகுநாள் தவம் செய்து, ஞானம் பெற்று விளங்கினான். பின் இப்ராஹீமின் மேன்மை எங்கும் பரவியது.

இப்ராஹீம் மெக்காவுக்கு வரப்போகிறார் என்பதை அறிந்த அத்தேசத்தவர், பலமரியாதைகளுடன் அவரை எதிர்கொண்டழைக்க ஊருக்கு வெளியில் காத்திருந்தார்கள். அவர்கள் யாரும் இப்ராஹீமை, பார்த்ததில்லையாகையால், இப்ராஹீம் ஒரு ஏழைச் சன்னியாசியைப்போல் வந்தபோது அவரை யாரோ என்று எண்ணி, அவரை நோக்கி "ஐயா மகாத்துமா இப்ராஹீமைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்கள்.

அதற்கு இப்ராஹீம் "ஐயா, அவரை அழைப்பதற்காக இவ்வளவு ஆடம்பரம் என்? அவரும் முன்பு

பாவம் செய்யவில்லையா? அவரும் எல்லாரையும்போல் ஒரு மனிதரல்லவா?" என்றான்.

அதைக் கேட்ட ஜனங்கள் கோபங்கொண்டு "நீ யார் அவரை இப்படிப் பழிப்பதற்கு?" என்று சொல்லி, நன்றாய் அடித்தார்கள். இப்ராஹீம் "நான் முன்பு செய்த பாவங்களுக்கெல்லாம் கடவுள் அளிக்கும் தண்டனை" என்று எண்ணிச் சும்மா இருந்தான். பிறகு அத்தேசத்தவர்களுக்கு இவர்தான் இப்ராஹீம் எனத் தெரிந்தது. அவர்கள், அவர் காலில் வீழ்ந்து தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினார்கள். பிறகு இப்ராஹீம் வெகுநாள் மெக்காவில் தங்கி, அநேக ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்து, ஆயுள் முடிந்தவுடன் அங்கேயே சமாதியானார்.

மதிப்புரை

மெய்ஞ்ஞானபோதம்.

(இரண்டாம் பாகம்.)

இது, சென்னை "லோகோபகாரி" பத்திரிகையின் அதிபராயும் ஆசிரியராயுமிருந்த தர்க்க அத்வைத சித்தாந்தப் போதகாசாரியர் பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் எழுதிய 53 வேதாந்த உபன்யாசங்கள் அடங்கிய நூலாகும். குருமுகமாக அறியவேண்டிய சரியை-கிரியை-யோக-ஞான விஷயங்கள் யாவும் தெளிவாக உணருமாறு செவ்விய வசன நடையில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. நித்தியானித்திய வஸ்து விவேகமடைய விருப்பமுடைய முமூட்சுகளுக்கு இந்நூல் பரமசாதனமாயுள்ளது; அவர்களால் இந்நூல் தினந்தோறும் பாராயணஞ் செய்யும் யோக்கியமுடையதாம். இது சென்னை, கோமளேசுவரன் பேட்டை, அம்பாவிலாச புத்தகசாலையில் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும்.

பிள்ளை விளையாட்டு

[மாயக்கூத்தன் எழுதியது.]

ஏந்த நாட்டிலும் சிறுகுழந்தைகள் விளையாட்டுகளிலே மிகவும் பிரியம் உடையவர்களாக இருப்பர். ஆதலால், நமது தமிழ் நாட்டிலும் சிறுகுழந்தைகள் முன்காலத்திலே பலவிதமான விளையாட்டுகளிலே மனது செலுத்தினார்கள் என்று சொல்லக்கூடும் அன்றோ? அப்போது எவ்விதமான விளையாட்டுகள் உண்டு—அவை எவ்வாறு இருப்பன—என்னும் விஷயங்களை இக்காலத்தில் உள்ள குழந்தைகள் அறிய விரும்புவார்கள். மிகப் பழையகாலத்திலே தமிழ்நாட்டிலே வழங்கிவந்த விளையாட்டுகளிலே சில, பழைய தமிழ் நூல்களிலே குறிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை இங்கே தொகுத்துக் குறிக்கிறேன். கடவுள் பிறந்து வளர்ந்து விளையாடியதாகக் கொண்டு, நமது விளையாட்டுகளை வருணிக்கும் 'பிள்ளைத் தமிழ்' என்னும் நூல்வகை ஒன்று தமிழ் இலக்கியங்களுள் உண்டு. இவற்றை நன்கு அறிவதற்கு அஃதே பெரிதும் அநுகூலமாகின்றது.

குழந்தை மிகச்சிறிதாக இருக்கும்போது, தன் தலையை மெல்ல நிமிர்த்தி அங்கும் இங்கும் அசைந்தாடும். அது அதற்கு ஒருவகை விளையாட்டு. அவ்வாறு ஆடும், அழகைக்காண்கின்ற பெற்றோர்கள் "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு சாந்தக்கிளியே சாய்ந்தாடு" என்று பாடி இன்புறுவர். அவ்வாறு குழந்தை

ஆடுவது செங்கீரை காற்றில் அசைந்து ஆடுவதை ஒத்திருக்கும்போலும். ஆதலால், அந்தப்பருவத்திலுள்ள குழந்தையைச் செங்கீரைப்பருவத்தில் உள்ளது என்று கவிகள் கூறுவர். பெற்றோர் அவ்வாறான பருவத்திலே உள்ள குழந்தையைப் பற்றிப் பாடுவதாகக் கவிகள் பாடும் பாட்டுகள் "செங்கீரை ஆடி அருளே!" என்றோ "ஆடுக செங்கீரை!" என்றோ "செங்கோ, செங்கீரை" என்றோ முடிவனவாக இருக்கும். இவ்வாறான பருவத்தைக் குழந்தைகள் ஐந்து ஆறு மாதங்களிலே அடைவன; அவைகளுக்கு அப்போதுதான் சில பற்கள் முளைத்து இருக்கும்; தலையிலே குழல்கள் மொய்த்து அலையும். அப்படி ஆடுகின்ற அழகை விஷ்ணு சித்தர் என்னும் பெரிய ஆழ்வார் பின்வருமாறு வருணித்திருக்கிறார் :—

"முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன்முன்,
முன்ன முகத்தணி ஆர் மொய்குழல்கள் அலைய,
அத்த! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே, ஆடுக, ஆடுகவே."

பின்னும்,

"கோல நறும் பவளச் செந்துவர் வாயினிடைக்
கோமள வெள்ளி முளைபோல் சில பல்இலக
நீல நிறத்து அழகு ஆர் ஐம்படையின் நடுவே
நின் கனிவாய் அமுதம் இற்று முறிந்து விழ
ஏலு மறைப்பொருளே, ஆடுக செங்கீரை;
ஏழுலகும் உடையாய், ஆடுக ஆடுகவே."

என்று இவ்வாழ்வார் பாடுகிறார்

இன்னும் ஒரு பாட்டிலே அக்காலத்திலே குழந்தைகளுக்கு இடப்படும் நகைகளைப் பூண்டு விளங்கிய ஓர் அழகிய குழந்தையாகக் கிருஷ்ணனைப்பாவித்துப் பாடியிருக்கிறார். அது மிக நல்ல கவியாகையால் அதை இங்கே குறிக்கின்றேன்—

"செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில்
சேர்திகழ் ஆழிகளும், கிண்கிணியும், அரையில்
தங்கிய பொன்வடமும், தாள நன் மாதுளையின்
பூவொடு பொன்மணியும், மோதிரமும், கிறியும்,
மங்கல ஐம்படையும், தோள்வளையும், குழையும்,
மகரமும், வாளிகளும், சுட்டியும் ஒத்து இலக
எங்கள் குடிக்கு அரசே, ஆடுக செங்கீரை;
ஏழுலகும் உடையாய், ஆடுக ஆடுகவே."

அழுகின்ற குழந்தையைத் தாயார் தாலாட்டி உறங்கப்பண்ணுவது வழக்கம் அல்லவா? அவ்வாறு தாலாட்ட உறங்கும் குழந்தைகள் தாயார் தாலாட்டவேண்டிக் கள்ள அழுகை அழுவது உண்டு. அதையும் ஒரு விளையாட்டாகக் கொண்டு அவ்விதக் குழந்தைப் பருவத்தைத் தாலாட்டுப் பருவம் என்று கவிகள் வருணிக்கிறார்கள். அவ்வாறு பிள்ளைத்தமிழ் பாடியவர்களுள் பகழிக்கூத்தர் என்ற பெரியார் ஒருவர். அவர் சுப்பிரமணிய ஸ்வாமி மீது "திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்" என்ற ஒரு சிறந்த நூல் பாடியுள்ளார். அந்நூலிலே தாலப் பருவத்தை வருணிக்கும் பாடல்களுள் ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

"அடைவடமும், தண்டையும், மின்புரை
அரைமணியும், கிங்கிணியும், கலன்
அணியும், மாறுவீறு ஆர் சீர்
ஆறுமுகமும், தொங்கல் சுமந்த பன்—
னிருகரமும், குண்டலமும், குழை—
யழகும் ஆர் ஆர் பாராதார்?
விரை பொரு மென்குஞ்சி அலம்பிய
புழுதியும் அங்கம் குழை பண்டியும்
மெலிய மேலே வீழ்வார், யார்;
வெருவிதமும் கொண்டு தவழ்ந்திடில்
அவரவர்தம் கண்கள் படும் பிழை
விளையும் ஏதேன், ஏகாதே!
வரை மணியும் தங்கமும் ஒன்றிய
கண பரியங்கம் தனில் இன்று கண்—
வளர வாராய்! வாழ்வே, நீ!
மணி நகையும் கொண்டு துயின்றிலை;
விரல் அமுதம் கொண்டு கிடந்தனை
மதுரமாய், நீ, பேசாயோ?
திரை பொரு தென் செந்தில் வளம்பதி
வளர வரும் கந்த, சிவன் பெறு
சிறுவா, தாலோ, தாலேலோ
திசைமுகனும், சங்கு அரியும், சதுர்
மறையும், இறைஞ்சும் பரை அம்பிகை
சிறுவா, தாலோ தாலேலோ"

இதற்குப் பின் கூறப்படுவது சப்பாணிப் பருவம் எனப்படும்; இப்பருவத்திலே சிறு குழந்தைகள் கை கொட்டி நகையாடுவன.

இதனை வருணிக்கும் பெரியாழ்வார்
"பொன் அரைநாணொடு மாணிக்கக் கிண்கிணி
தன் அரையாடத் தனிச்சுட்டி தாழ்ந்து ஆட
மாயவனே, கொட்டாய் சப்பாணி."
என்று பாடுகிறார்.

இதனையே பகழிக்கூத்தரும்
"கருதிய தமனிய மணி அரைவடம் இடுகெட்டு வடத்தோடும்
புகழ்விடு பரிபுரம் ஒலிஎழ மணியுமிழ் கைக்கடகப்பூணும்
"இருசுடர் ஒளிபெற கொட்டுக சப்பாணி."
என்று பாடுகிறார்,

இப்பருவத்தை அடுத்து உள்ளது அம்புலிப்பரு
வம் என்பது. அந்தப் பருவத்திலே குழந்தை சந்திரனை
விளித்துத் தன்னுடன் விளையாட வரவேண்டுமெனக்
கூவி அழைக்கும்; "தூங்கிலா முற்றத்தே போந்து விளை
யாட, வானிலா அம்புலீ! சந்திரா! வா" என்று கண்
ணன் அழைப்பதாகப் பெரியாழ்வார் பாடியிருக்கின்றார்;
கண்ணன் சந்திரனைக் கூவி அழைக்கும் அழகைப்பின்
வருமாறு வருணிக்கிறார்.

"அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுறாமு
மழலைமுற்றாத இளம் சொல்லால் உன்னைக் கூகின்றான்"
என்றும்,

"என்சிறுக்குட்டன் எனக்கு ஓர் இன்னமுது எம்பிரான்
தன்சிறு கைகளால் காட்டிக் காட்டி அழைக்கின்றான்"

என்றும் "உன்னை விளிக்கின்ற கைத்தலம் நோவாமே
கடிது ஓடி வா" என்றும் கண்ணன் "தடங்கண்ணால்
மலர விழித்து, ஒக்கலைமேல் இருந்து உன்னையே சுட்
டிக்காட்டும், காண்" என்றும் வருணித்து "என் மக

னுடைய கூத்தினை நோக்கிப்போ'' என்றும் "மக்கள் பெறாத மலடன் அல்லைபோல் வா கண்டாய்'' என்றும் சந்திரனைத் தாயார் அழைப்பதாகப் பாடுகிறார்.

இன்னும் இரண்டொரு பருவங்கள் இங்கே குறித்தல் தகும். நடைகற்கத் தொடங்கும் சிறு குழந்தை ஆடி யாடி மெள்ள நடப்பதை ஒரு அழகிய திருவிளையாடலாகக் கொள்வர் பெற்றோர்; அவ்வாறு பாலகிருஷ்ணன் நடை கற்றதை அசோதை கண்டு அநுபவித்துப் பாடியதாகப் பெரியாழ்வார் பத்துப் பாட்டுக்கள் பாடியுள்ளார். அவற்றுளே, "கண்ணனுடைய உடைமணி பறைபோல சப்திக்கிறது; கண்ணனுடைய கிண்கிணிகள் ஆரவாரிக்கின்றன; அவனுடைய சிவந்தவாய் அமுதம் ஊறியூறி இற்று இற்று விழுகின்றது; சில வெண்பற்கள் முளைத்துச் சிவந்த வாயினிடையே பிரகாசிக்கின்றன'' என்று பாடியுள்ளார்.

அப்பாடல்களின் பகுதிகளாவன :—

(1) தொடர் சங்கிலிகை சலார் பிலார் என்ன, தூங்கு
பொன்மணி ஒலிப்ப,
படுமும் மதப்புனல் சோர, வாரணம் பையநின்று
ஊர்வது போல்
உடன்கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப, உடைமணி
பறை கறங்க
தடந்தாள் இணைகொண்டு, சாரங்கபாணி
தளர்நடை நடவானோ?''

(2) செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும்
சிறுபிறை முளைப்போல,
நக்கசெந் துவர்வாய்த் திண்ணைமீதே
நளிர்வெண் பல்முளை இலக,''

மின்னல் ஓர்வெள்ளிப் பெருமலைக் குட்டன்
மொடுமொடு விரைந்தோட,
பின்னைத் தொடர்ந்தோர் கருமலைக்குட்டன்
பெயர்ந்து அடியிடுவதுபோல்.

படர்பங்கய மலர்வாய் நெகிழப் பனிபடு சிறுதுளிபோல
இடங்கொண்ட செவ்வாய் ஊறியூறி இற்றிற்று வீழநின்று
கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல்போல் உடைமணி
[கணகணென
தடந்தாள் இணைகொண்டு சாரங்கபாணி தளர்நடை நட
[வானோ.

இன்னொரு இனிய பருவம் அச்சோப்பருவம்
ாப்படுவது. அப்பருவத்துக் குழந்தையைத் தன்னை
து கட்டிக்கொள்ளும்படி தாயார் அழைக்க அது
து கட்டிக்கொள்ளும். அது ஒரு சிறு குழந்தை
ளையாட்டு ஆகும். பெரியாழ்வார்

"ஆரத்தழுவாய், வந்து, அச்சோ, அச்சோ ;
ஆயர்கள் போரேறே அச்சோ, அச்சோ.''

ன்று பாடுகிறார். பின்னும்,

"பொன்னியல் கிண்கிணி சுட்டி புறங்கட்டி
தன்னியல் ஓசை சலன் சலன் என்றிட
என்பெருமான்! வாராய், அச்சோ, அச்சோ.''

ன்றும்,

"செங்கமலப் பூவில் தேன் உண்ணும் வண்டே போல்
பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப
அங்கைகளாலே வந்து அச்சோ, அச்சோ ;
ஆரத்தழுவாய், அச்சோ, அச்சோ.''

என்றும் கண்ணனுடைய அச்சோப்பருவத்தை வருணிக்கிறார்.

இதுவரை மிகச் சிறுகுழந்தைகள் தங்களுடைய பெற்றோர்களுடன் கூடி விளையாடி இன்புறுத்தும் விளையாடல்களைப்பற்றிப் பெரியோர் பாடியுள்ளவற்றைக் குறித்தேன். இனிக் குழந்தைகள் வேறு குழந்தைகளோடு கூடி விளையாடும் விளையாட்டுகள் பல இவ்விதக் கவிகளிலே வருணிக்கப்பட்டுள்ளன. அவைகளைக் குறிக்கிறேன்.

(1) சிற்றில் இழைத்தலும் அழித்தலும் இது சிறுமிகள் சேர்ந்து விளையாடும் ஒரு விளையாட்டு. பொடி மணலைக்கொண்டு வீடுகட்டி விளையாடுவது சிறு பெண்களின் விளையாட்டாக இருந்தது. இவ்வாறு சிறு பெண்கள் கட்டிய வீடுகளை அவ்வூர் சிறுவர் அழித்துக் கலைப்பது அவர்களுக்கு ஒரு விளையாட்டு ஆகும். இவ்வாறு ஆயர்பாடியிலே கோபகன்னிகைகள் சிற்றில் இழைத்ததாகவும் கண்ணன் அழித்ததாகவும் ஆண்டாள் வருணித்துப் பாடியிருக்கிறாள்.

உதாரணமாக:

(1) வண்டல் நுண்மணல் தெள்ளி யாம் வளைக்
கைகளால் சிரமப்பட்டோம்

(2) வெள்ளை நுண்மணற் கொண்டு சிற்றில் விசித்திரப்பட
வீதிவாய்த் தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
அழித்தி; ஆகிலும், உன்தன்மேல் உள்ளம் ஓடி
உருகல் அல்லால் உரோடம் ஒன்றும் இலோம், கண்
[டாய்

(3) வட்டவாய்ச் சிறுதூதையோடு சிறுசுளகும்
மணலும் கொண்டு, இட்டமாய் விளையாடுவோங்களைச்
சிற்றில் ஈடு அழித்து என் பயன்?